SWATHANTRA SANGU Regd. No. M. 281

சுதந்திரச்சங்கு

வாரப் பதிப்பு

கிரிக்கெட்டில் 'போல்ட்'
—(படம்)

தூங்கு மூஞ்சி சபை
—(படம்)

குதிரை சோனி—கொள்ளுச்செலவு

அழகு நம்பியா பிள்ளை
—சு. கிருஷ்ணய்யர்

"போ-முன்னே"
—முஸ்ஸோலினி.

சைத்தான் யுக்தி
—சிறு கதை.

குழந்தைகளின் தியாகம்
—ஸ்ரீ வ. வே. சு. அய்யர்.

ரஹீம் கவிதை மாலை
—திப்பு.

புத்தகம் 4. மாசிமீ 5உ (16-2-34) வெள்ளி இதழ் 12.

சத்திய சோதனை

முதல் பாகம் ரூ. 1-8.
இரண்டாம் பாகம் ரூ. 2.

மகாத்மா காந்தி

தம் சுயசரிதத்தை இதில் சொல்லியிருக்கிருர்.

சுதந்திரச் சங்கு காரியாலயம், 8-c, பைகிராப்ட்ஸ் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

"Swathanthara Sangu"

A high class popular Tamil weekly.

Price one anna a copy.

Annual subscription:

Inland Rs. 4. **Foreign Rs. 6.**

ADVERTISEMENT TARIFF

	Per Insertion.
Advertisement rates per Page	Rs. 40 0 0
" Half Page	Rs. 20 0 0
" Quarter Page	Rs. 10 0 0
" per column inch	Rs. 1 8 0

One page is divided into 3 columns of $2\frac{1}{4}'' \times 9''$

Cover Pages

2nd & 3rd cover page Rs. 50.
4th cover page Rs. 75.

For contracts of 3 months, 6 months and One year a discount of 5, 10 & 15% respectively will be given over these rates.

Office: 8-c, Pycrofts Road,
TRIPLICANE, MADRAS.

"சுதந்திரச் சங்கு"

ஒரு உயர்தரத் தமிழ் வாரப் பத்திரிகை.

தனிப் பிரதி விலை அணு 1.

வருடச் சந்தா:

உள்நாடு ரூ. 4. வெளிநாடு ரூ. 6.

விளம்பர விகிதங்கள்

ஒரு பக்கத்திற்கு தடவை ஒன்றுக்கு	ரூ. 40 0 0
அரைப் பக்கத்திற்கு " "	ரூ. 20 0 0
கால் பக்கத்திற்கு " "	ரூ. 10 0 0
ஒரு பத்தி ஒரு அங்குலத்துக்கு " "	ரூ. 1 8 0

ஒரு பக்கம் $2\frac{1}{4}'' \times 9''$ அளவுக்கு 3-பத்திகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

அட்டைப் பக்கங்கள்

2-வது, 3-வது பக்கங்களுக்கு ஒரு தடவைக்கு ரூ. 50.
4-வது பக்கத்துக்கு ஒரு தடவைக்கு ரூ. 75.

3-மாதம், 6-மாதம், ஒரு வருஷம் ஒப்பந்தங்களுக்கு, இந்த விகிதங்களிலிருந்து முறையே நூற்றுக்கு 5, 10, 15 வீதம் 'டிஸ்கவுண்ட்' தள்ளிக் கொடுக்கப்படும்.

மானேஜர்,
"சுதந்திரச் சங்கு",
8-c, பைக்ராப்ட்ஸ் ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை.

சுதந்திரச்சங்கு

"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லாமெடுத் தோதுவோமே"

போன் நெ. 8088

ஆசிரியர்: சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

Vol. IV.] மாசி ௴ 5௳ வெள்ளிக்கிழமை (16—2—1934) [No. 12

கிரிக்கெட்டில் 'போல்ட்'



—Courtesy: ஹி. டைம்ஸ்.

கிரிக்கெட் விளையாட்டில் துடுப்பெடுத்து ஆடுகிறவனுக்குப் பின்னால் மூன்று முளைகள் நட்டிருக்கும். எதிர்க் கட்சிக்காரன் எதிரே யிருந்து ஒரு பந்தை "போல்" பண்ணுவான். துடுப்பெடுத்து ஆடுபவன் ஜாக்ரதையாக ஆடா விட்டால் அந்தப் பந்து முளையின்மீது பட்டு அவன் 'போல்ட்' ஆகி விடுவான். அதாவது அவன் அவுட்! ஆட்டத்தின் இந்தச் சட்டம் தெரியாமல் ஒருவன், "நான் இன்னும் அவுட் இல்லை! இன்னும் கொஞ்சநேரம் ஆடுகிறேனே!" என்று சொல்வானாகில் அந்தப் பிரகஸ்பதியை என்னென்பது!

இந்திய மிதவாதிகள் அத்தகைய பிரகஸ்பதிகளாக இருக்கின்றனர். வட்டமேஜை ஆட்டத்தில் பந்தெறியும் நெளிவு சுளுவு நன்றாயறிந்தவர் ஸாமுயேல் ஹோர். வெள்ளைக் காகிதப் பந்து விசையாய் விழுந்தபோதே மிதவாதிகள் சம்பூர்ணமாக 'போல்ட்'! தோற்றுப் போனவர்கள் ஆட்டத்தைவிட்டு விலக வேண்டியதுதானே!

சேமன்லால் சேதல்வாட் என்ற மிதவாதி பம்பாயில் வெள்ளைத் திட்டத்தைக் கண்டிக்க ஓர் மகாநாடு கூட்டப் போகின்றாராம். ஆடத் தெரியாது 'போல்ட்' ஆகித் தோற்றவர்களுக்கு ஆட்ட மைதானத்தில் இன்னமும் நிற்க வெட்கமில்லையா?

கைதியான ஜவஹர்

சென்ற திங்களன்று பண்டித ஜவஹர்லால் அலகாபாத்தில் ஆனந்த பவனத்தில் கைதியாகிய செய்தி கேட்டுத் திடுக்கிட்டு விட்டோம். பண்டிதர் 'டீ' சாப்பிட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தாராம். அப்போது வாரண்டை எடுத்துக்கொண்டு போலீஸ் இனிஸ்பெக்டர் நுழைந்தாராம். "உங்களை நான் சிலநாட்களாக எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேனே" என்று புன்னகையோடு புகன்றாராம் பண்டிதர். அது வாஸ்தவமே. பண்டித ஜஹவர் கைதியாகி விடுவார் என்ற வதந்தி வெகு நாளாக உலவிக்கொண் டிருந்தது. இது வரையில் பண்டிதர் பத்துத் தடவை சிறை சென்றிருக்கிறார். 5½ வருட காலம் சிறைவாசம் செய்த 'கருப்புக் குல்லாய்' அவர். ஆகவே சிறைவாசத்துக்கு அவர் பழகியவர்தான். சுதந்திர முன்னணியில் நிற்கும் வீரனுக்குப் இந்தச் சிறைவாசம் ஓர் லட்சியமாகுமா ? அன்னை ஸ்வரூபராணி கண்ணீரோடு விடை தர, ஜவஹர் போலீஸாரைத் தொடர்ந்து போய்விட்டார்.

ஆனால் இந்தச் சமயத்திலா பண்டித ஜவஹரைப் பொது ஜனங்களிடமிருந்து பிரிக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்கின்றோம். பூகம்பத்தினால் கஷ்டப்படும் ஜனங்களுக்கு உதவி செய்தில் பண்டிதர் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். இத்தகைய சேவையில் பண்டித ஜவஹர்லால் மத்தியில் நின்றால் அவரைச் சுற்றி உழைப்பதற்குப் பாரத நாட்டின் இளைஞர் ஆயிரக்கணக்கில் கூடுவது சகஜம் !

சென்ற 9ம் தேதியன்று கையில் மண் வெட்டியும் தலையில் கூடையும் ஏந்திப் பண்டித ஜவஹர்லால் மாங்கியர் நகரில் தொண்டர் படை பின்தொடரச் சென்ற காட்சி சொல்லத்தரமன்று. அப்பேர்ப்பட்ட ஓர் ஆதர்ச புருஷனைத் திடீரென மக்களிடமிருந்து பிரிப்பதைக் கஷ்ட நிவாரண சேவைக்கு இடைஞ்சல் செய்தது போலத்தான் எண்ணவேண்டும். பண்டிதரை 124-ஏ. பிரிவின்கீழ்க் கைது செய்திருக்கிறார்களாம். இந்தக் குற்றச்சாட்டு இன்னும் சில மாதங்கள் பொறுத்திருந்தாலென்ன, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் கவிழ்ந்து போய்விடுமா? ஏன் இந்தப் பரபரப்பு ?

பூகம்பக் கஷ்ட நிவாரண வேலையில் ஈடுபடுவதற்கு ராஜேந்திரருக்குத் துணையாக ஸர்தார் வல்லபாய் படேலைச் சிறையினின்று துரைத்தனத்தார் விடுவிக்கலாகாதாவெனப் பத்திரிகைகள் கேட்டுக்கொண்டிருக்கும்போது ராஜேந்திரருக்கு வலது கை போன்ற ஜவஹரையும் சிறைக்குக் கொண்டு போய்விட்டது சர்க்காருடைய பிற்போக்குப் புத்தியையே காட்டுகின்றது.

"காந்தியடிகளே ! சிரம பரிகாரத்துக்கு நான் இந்தத் தடவை சல்கத்தாவுக்குப் போகிறேன். எனது அன்பு பூர்ணமாகத் தங்களிடம்" என்றும், "குழந்தை இந்திரா! நான் என்னுடைய இன்னொரு வீட்டுக்குக் கொஞ்ச நாள் போயிருந்து வருகிறேன்" என்றும், "பாபு ராஜேந்திரா! கஷ்ட நிவாரண வேலையில் இன்னும் அதிக வேலை செய்யமுடியாது போனதற்கு வருந்துகிறேன். நீங்கள் உங்கள் வேலையைத் தீவிரமாக நடத்துங்கள். இந்த துர்த்தசையினின்று பீஹார் மீளுமாக !" என்றும் தந்திகளைத் தட்டிவிட்டு, ஜவஹர்லால் போய்விட்டார். இந்தியத் துரைத்தனம் செய்துள்ள தவறுதல் ஜாப்தாவில், அடக்குமுறை அட்டவணையில், தற்சமயத்தில் ஜவஹரைக் கைசெய்ததும் சேருமென்பதில் ஐயமில்லை.

வீரக் குழந்தைகள்

இன்றையச் சங்கில் நமது தொடர் கதையின் முக்கியமான கட்டம் பிரசுரமாயிருக்கிறது. ஸ்ரீ அய்யர் எழுதியுள்ள குருகோவிந்த சிங்கன் சரிதையில் இரண்டு குருபுத்திரர்களும் செய்த மகா தியாகம் ஆவேசம் ததும்பச் சித்தரிக்கப் பட்டிருக்கிறது. புராண காலத்தில் பரதன், அபிமன்யு, துசலவர் முதலியோர் சிறுபோழ்தில் காட்டிய வீரத்தைப் போல, இந்த நவ யுகத்தில், ஜொராவர் சிங்கனும், பத்தே சிங்கனும் வீரங் காட்டிச் சென்றார்களென்பதைக் கதையினின்று அறியலாம்.

குதிரை சோனி—கொள்ளுச் செலவு

குதிரை சோனியா யிருந்தாலும் கொள்ளுத் தின்பதற்குக் குறைவில்லை. என்று ஓர் பழமொழி. அந்த மாதிரி இப்போதுள்ள சட்டசபை உதவாக்கரையான போதிலும் அதனால் தேச மக்களுக்கு ஏற்படும் செலவுக் கென்னவோ குறைவில்லை. அங்கத்தினர்களுக்கு, போக வர ரயில் செலவு, டெல்லியில் முகாம் செலவு எல்லாம் ஏராளமாகக் கொடுக்கப் படுகின்றன. அநியாயமான ரிஸர்வ் பாங்கி மசோதா நிறைவேற்றப் பட்ட அந்த ஸெஷனுக்கு மட்டும், லட்சத்து 33 ஆயிரம் ரூபா படிச் செலவு ஆகிறதென்றால், இதைவிட அக்ரமம் வேறுண்டோ ? யாருடைய பணம் என்று நினைத்துக் கொண்டு இப்படி வாரி யிறைக்கிறார்கள்?

போலி நாணயங்கள்

புதிய டெல்லியில் ஒரு வீட்டைச் சோதனை போட்டபோது போலி நாணயங்களை அச்சிடுவதற்கான யந்திரங்களும் கருவிகளும் அகப்பட்டனவாம். ஈயத்தில் அச்சடிக்கப்பட்ட நாணயங்கள் ஆப்கனிஸ்தானத்திலும் பலூசிஸ்தானத்திலும் வெள்ளி நாணயங்களாகச் செலாவணியாகிக் கொண்டிருந்தனவாம். அதே புதிய டெல்லியில் சட்டசபையில் எத்தனையோ அங்கத்தினர்கள் தங்களை ஜனங்களின் பிரதிநிதிகளென வர்ணித்துக் கொள்கிறார்கள். ஆனால் உண்மையில் யாவரும் செல்லாக்காசுகளுக்குச் சமானம். உண்மையில் ஜனப்பிரதிநிதிகளன்று; வெறும் வேஷதாரிகள். சட்ட சபையிலுள்ள போலி நாணயங்களைக் கண்டு பிடித்துப் பகிரங்கப் படுத்தினால், இந்திய ஜனங்களுக்கு எவ்வளவோ உபயோகமாயிருக்கு மன்றோ!

தலையும் குல்லாயும்

சிக்கனம் என்பது குடித்தன லட்சணம் மட்டுமல்ல; துரைத்தன லட்சணமும் அதுதான். ஒழுங்கான வரவு அதற்கேற்பச் சிக்கனச் செலவு இவ்வாறு நடப்பதுதான் சிறந்த அரசியல். குடிகளுக்குச் சிறிதேனும் ஆயாச முண்டாக்காமல் வரி வசூலித்தல்—குடிகளுக்கு நன்மை பயக்கும் வழிகளிலேயே பணத்தைச் செலவிடல்—இது தான் அழகான அரசியல். குடிகளுக்காக அரசாங்கமே யன்றி, அரசாங்கத்துக்காகக் குடிகளல்ல. தலைக்காகக் குல்லாயே யன்றி, குல்லாய்க்காகத் தலையல்ல. இந்தத் தத்துவத்தை இந்திய சர்க்காரும் உத்தியோகஸ்தர்களும் சட்ட சபைகளும் உணர்ந்து கொள்ள வேண்டுவது அத்தியாவசியம்.

அடுத்த வாரத்தில் டெல்லிச் சட்ட சபை இந்திய வரவு செலவுத் திட்டத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்யப் போகிறது. மாகாணச் சட்ட சபைகளும் தத்தம் வரவு செலவுகளைப் பிறகு நிர்ணயிக்கப் போகிறது. ஆகவே இந்த சமயத்தில் ஒவ்வொரு சட்ட சபை அங்கத்தினனும் தனது பெரும் பொறுப்பை உணர்ந்தே நடக்க வேண்டும். முக்கியமாக இந்த வருடம் இந்தியாவில் ஏற்பட்டுள்ள வறுமையைப் போல நமது ஞாபகம் அறிந்து வேறு வருடம் இருந்த தில்லை. எங்கும் வியாபார மந்தத்தால் வியாபாரி தவிக்கிறான். நெல் விலை போக மாட்டாமல், வரிச்சுமையையும் கடன் சுமையையும் தாளமாட்டாமல், விவசாயி வருந்துகின்றான். இளைஞரோ படித்து விட்டுப் பல்லாயிரக் கணக்கில் வேலை கிட்டாமல் தெருக்களில் அலைகின்றனர். தரித்திரம்! தரித்திரம்! தரித்திரம்! இந்த சந்தர்ப்பத்தில் பொது ஜனங்களிட மிருந்து வசூலிக்கப் பட்ட ஒவ்வொரு தம்பிடியும ஒவ்வொரு பவுனுக்குச் சமானமானது. இதைச் சர்க்கார் உணர்ந்து கொள்ள வேண்டும்.

சட்ட சபைகளின் மசோதாக்களையும், திருத்தப் பிரேரணைகளையும், ரிஸர்வட் பாதிகளையும் பற்றிச் சாதாரண ஏழை இந்தியன் ஏது மறியான். அவன் மூளையில் படுவது சர்வ சாதாரணமான விஷயங்கள்தான். ஆனால் அவைகளைத்தான் சட்ட சபையினரும் ஆராய்ச்சி செய்யப் போகிறார்கள்.

1. "கஞ்சிக்கு அவசியம் உப்பு. அதுக்கு வரி போட்டிருக்காங்களே! சமுத்திரத்திலேந்து எனமா நிறைய உப்புக் கிடைக்குதே! உப்பு வரியைச் சர்க்கார் எடுக்கமாட்டாங்களா?

2. "காலணா விற்ற கார்டு முக்காலணாவாயிடுச்சே! இப்போ வெல்லாம் லெட்டர் எழுதறதையே மறந்துட்டோம். இந்தக் கார்டு விலையைக் கொறைக்க மாட்டார்களா?

3. "நெல்லு மூணு ரூபா வித்தபோது தஞ்சாவூருக்கு ரயில் சத்தம் $1\frac{1}{2}$ ரூபா கொடுத்தம். நெல்லு முக்கா ரூபாய்க்கு இப்போ சிப்படுது. இன்னமும் $1\frac{1}{2}$ ரூபா ரயில் சத்தமென்னுக்கா யாரையா வண்டிலே ஏறுவாங்க?

4. "இந்த ஏழை ஊரிலே கொள்ளை கொள்ளையா ஏனையா சம்பளம் தர வேண்டும். சும்மாக் கையெழுத்துப் போட்டுக் காலங் கழிக்கிறவங்களுக்கு ஐயாயிரம் பதினாயிரம் சம்பளமாமே! என்ன அக்ரமம்! வைஸ்ராய்க்கு மாதத்துக்கு 21 ஆயிரம் ரூபா சம்பளமாம். அதைத் தவிரப் படிச்செலவுகளாம். இப்படிச் சம்பளம் கொடுத்தா கட்டுமா.

5. "வருசா வருசம் பட்டாளச் செலவு 46 கோடி ரூபாயின்னு சொல்லிக்கிறாங்களே. என்னத்துக்கு இந்தப் பட்டாளம். எங்கேயாவது சண்டை நடக்குதா? இந்த அநியாயச் செலவையெல்லாம் ஒழிச்சு எங்க தலைமேலேயுள்ள வரியைக் குறைச்சாத்தான் இம்மே வாழமுடியும்."

சாதாரணமாகத் தோன்றும் இதே விஷயங்களைத்தான் டெல்லிச் சட்ட சபை ஆராய்ச்சி செய்யப் போகிறது. கொஞ்சமாவது தயைதாட்சண்ணியமின்றிச் செலவுத் திட்டங்களை வெட்டியெறிந்தே யாக வேண்டும். சிக்கனச் செலவு திட்டத்தை சர்க்கார் ஏற்றுக் கொள்ள மறுத்தால், அத்தனை அங்கத்தினர்களும் இடங்களைக் காலி செய்து விட்டு வந்து விடட்டும்! இந்தத் தேசத்தில் யதேச்சாதிகாரம்தான் அமுலிலிருக்கிறது என்பதை உலகுக்குப் பகிரங்கப் படுத்துவதற்கு வழியுண்டாகு மன்றோ? இந்தத் தடவை வரவு செலவுத் திட்டத்தைச் சரியாக நிர்ணயிக்காவிட்டால், தேசத்தின் கஷ்ட நஷ்டங்களுக்குச் சர்க்காரும் சட்டசபைகளுமே பொறுப்பாளிக ளாவார்கள்.

தூங்கு மூஞ்சிச் சபை



"இந்த சாம்ராஜ்யத்திலேயே சோம்பேறித்தனம் குடிகொண்டிருக்கும் சபை டெல்லிச் சட்டசபைதான்!" என்று எப்.இ. ஜேம்ஸ், சொன்னாராம். அந்தக் காட்சியை ஹிந்துஸ்தான் டைம்ஸ் சித்திரக்காரரான ஸ்ரீயுத சங்கர் படம் எழுதிக் காட்டியிருக்கிறார்.

முத்தண்ணாச் சபையில்

இராஜாங்க சபை என்று டெல்லியில் இன்னொரு சபை யிருக்கின்றதல்லவா, அதன் முன்னே "பெரிய உத்தியோகங்களை யெல்லாம் இந்தியர்களுக்கே தரவேண்டும்" என்று ஓர் தீர்மானத்தை ஒரு அண்ணா கொண்டுவந்தார். சர்க்கார் அங்கத்தினர்கள், தீர்மானம் அவசியமில்லை யென்றும் ஸாமர்த்தியத்துக் கேற்றபடி இந்தியர்களுக்கே கூடியவரையில் உத்தியோகங்கள் தரப்பட்டு வருவதாகவும் மழுப்பினர். தீர்மானம் கொண்டுவந்த பிரகஸ்பதி தீர்மானத்தை வாபீஸ் வாங்கிக் கொண்டு விட்டார். சர்க்கார் தரப்பினர் சொன்னதை வாஸ்தவமென்று ஒப்புக்கொண்டு தீர்மானத்தை வாபீஸ் வாங்கினாரா அல்லது தனது தீர்மானம் தவறானது என்று நினைத்துக்கொண்டு வங்கில் போய்ப் புகுந்துகொண்டாரா? ஆங்காங்கு காலியாய்ப் போயுள்ள கவர்னர் பதவிகளுக்கு யாரோ சில இந்தியர்களைத் தாத்காலீகமாக நியமித்திருப்பதைக் கண்டு 'இதுவே ஸ்வராஜ்யம்' என்று மனதுக்குள் சந்தோஷமடையும் முத்தண்ணா மூளைகளுக்கு உண்மை நிலை எப்படிப் புலப்படும்?

'போலிக்கதரே' மாண்டாயோ!

ஜப்பான் கதர், ஈரோட்டுக் கதர், மில்லுக் கதர், பாதிக் கதர் என்று என்னென்னவோ 'கதர்'களெல்லாம் தோன்றிக் கையால் நூற்றுக் கையால் நெய்யப்பட்ட உண்மைக் கதரோடு போட்டி போட்டு ஊரை ஏமாற்றிக் கொண் டிருக்கின்றன. இந்தப் போலிக் கதர்களை ஒழிக்கவேண்டு மென்பதற்காக ஓர் மசோதா பல வருடங்களாக டெல்லிச் சட்டசபையில் காத்துக் கொண்டிருந்து இந்த வருடம் நிறைவேறிவிட்டது. 'கையால் நூற்றுக் கையால் நெய்த துணிக்கே கதர் என்ற பெயர்' என்று இந்த மசோதா நிர்ணயித்திருக்கிறது. இனிமேல் மாகாணத் துரைத்தனங்கள் இந்த மசோதாவை அமுலுக்குக் கொண்டுவரப் பிரயத்தனங்கள் செய்யவேண்டும். முக்கியமாகச் சென்னை மாகாணத்தில் இந்தப் போலிக்கதர் மோசடி பலமாயிருக்கிறது. அதனால் உண்மைக் கதர் வர்த்தகம் ஓரளவு பீடிக்கப்பட் டிருக்கின்றது. போலிக்கதர் வர்த்தகம் அடியோடு மறைந்து உண்மைக் கதர் வளர்ச்சி யுறுமாக!

சபாஷ் புதுக் கோட்டை!

இந்த நெருக்கடியான காலத்தில் ஏழைக் குடியானவனுக்கு இரங்கிப் புதுக்கோட்டை சமஸ்தானம் செய்துள்ள காரியத்தை இதர அரசாங்கங்களும் பின்பற்றி யாகவேண்டும். சமஸ்தானத்திலின்று விவசாயிகட்குக் கொடுக்கப்பட்டுள்ள கடன் தொகைமீது இந்த வருடம் வட்டி வசூலிப்பதில்லை யெனப் புதுக் கோட்டை சர்க்கார் முடிவு செய்திருக்கிறதாம். இதனால் சமஸ்தானத்துக்கு லட்ச ரூபா நஷ்டம் ஏற்படலாமென்று சொல்லப்படுகிறது. சொந்தக் குடிகளின் நலத்துக்காகத் தனது லாபத்தை விட்டுக் கொடுப்பது தான் சரியான துரைத்தனம். சென்னை மாகாண அரசாங்கமும் இந்தச் சமயத்தில் ஏழை விவசாயிக்கு உதவி செய்தே தீரவேண்டும். வட்டி தள்ளிக் கொடுப்பது பட்டுமின்றி வரியையும் அநேக இடங்களில் வஜாச் செய்தே தீரவேண்டும். இல்லாவிடில் இந்த வருடத்தோடு விவசாயத் தொழிலையே ஆயிரக்கணக்கான பேர் விட்டு விட்டு ஓடிப் போய் விடுவார்களோ வென அஞ்சவேண்டியிருக்கிறது.

காமன்ஸ் சபையில் லஞ்சம்?

லண்டனில் காமன்ஸ் சபையில் ஒரு முக்கிய சம்பவம் நடந்திருக்கிறது. "சாராயத்திற்குச் சர்க்காரின் சலுகை சம்பாதித்துத் தரவேண்டு மென்பதற்காகச் சில வியாபாரிகள் இங்குள்ள பிரதிநிதிகள் சிலருக்கு 2000 பவுன் லஞ்சம் கொடுத் திருக்கிறார்களாம்!" என்று லேடி ஆஸ்டர் என்ற ஸ்திரீப் பிரதிநிதி மூட்டையை அவிழ்த்துக் கொட்டினாள். உடனே பிரமாதமாக அவள் வார்த்தையை எதிர்த்துச் சத்தங்கள் கிளம்பின. லேடி ஆஸ்டர் தனது வார்த்தையைப் பின்னர் வாபீஸ் வாங்கிக் கொண்டாளாம். 2000 பவுன் லஞ்சம் தரப்பட்டது எப்படியாயினும், இந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியப் பார்லிமெண்டு சபை என்னென்ன வலைகளில் விழக் கூடு மென்பதை லேடி ஆஸ்டரின் வாக்கியங்கள் காட்டுகின்றன. "இன்றைக்கு ஜோஸ்யம். நாளைக்கு ஹேஷ்யம். நாளன்னறு உண்மை" என்று ஓர் பழமொழி உண்டு. ஆனால் இந்த அழகான சபையைத்தான் உலகத்திலேயே சிறந்த பிரதிநிதிச் சபையென, பிரிட்டிஷார் வர்ணித்துக் கொள்கிறார்கள்!

சிட்டகாங் தடபுடல்

சிட்டகாங்கில் இப்போதுள்ள போலீஸ் படைகள் போதாவாம். ஆகவே 'அமைதி காப்பத'ற்காக அதிகாரிகள் இன்னும் கொஞ்சம் அதிகப் படையைத் தருவித்து நிறுத்தப் போகிறார்களாம். அந்தப் படையின் செலவையும் அங்குள்ள குடி ஜனங்கள்தான் தரவேண்டுமாம். என்ன அநியாயம்! சரித்திரத்தில் சொல்லப்பட்ட 'ஜஸியா' வரியையெல்லாம் மிஞ்சி விட்டதே சிட்டகாங் அதிகாரிகள் விதிக்கும் தண்ட வரி! சிட்டகாங் ஜனங்களில் பலர் அடக்கு முறைக்கு ஆற்றமாட்டாமல் ஊரை விட்டே ஓடிப் போகின்றார்களாம். சிட்டகாங்கைப் பாலைவனமாகச் செய்து பார்க்கவேண்டு மென்பது அதிகார வர்க்கத்தின் ஆசையோ?

உருப்படாப் புது டெல்லி

இந்திய வரிப் பணத்தைக் கொட்டிப் புதிய டெல்லி என்ற நகரம் நிர்மாணிக்கப்பட்டது. இதற்கான செலவு இன்னும் ஓய்ந்தபாடில்லை. அதன் அழகையும் சவுகர்யத்தையும் விருத்தி செய்வதற்காக மற்றும் ஒன்பது லட்சம் ரூபா செலவிட வேண்டுமெனத் தீர்மானித் திருக்கிறார்களாம். சில கட்டிடங்களுக்கு இன்னும் கொஞ்சம் மின்சார விசிறிகள் போடுவதற்காக 3¾ லக்ஷ ரூபாய் செலவிடப் போன்றார்களாம். கெஜட்ட் ஆபீஸர்களின் பங்களாக்களில் போடுவதற்கு பெஞ்சி நாற்காலிகளை 1 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய்க்கு வாங்கப் போகிறார்களாம். மேலும் வைஸ்ராய் வீட்டுப் பியூன்கள் தங்குவதற்காக 55 ஆயிரம் ரூபாய்ச் செலவில் சில வீடுகள் கட்டப் போகிறார்களாம். இப்படிப் பல வழிகளில் புதிய டெல்லி காசை விழுங்கப் போகிறது. இந்த மின்சார விசிறிகளில்லாமலும், பெஞ்சி நாற்காலிகளில்லாமலும், புது வீடுகளில்லாமலும் இத்தனை நாள் அரசாங்கம் நடைபெறவில்லையா? இந்தப் பணப் பஞ்ச காலத்தில் என் ஊதாரித்தனமாகக் காசைச் செலவழிக்க வேண்டும். கிழக்கே பூகம்பத்தால் தவித்துக் கொண்டிருக்கும் ஜனங்களுக்கு இந்த 9 லட்சத்தையும் தந்து உதவி செய்ய லாகாதா? அதைவிடப் புதிய டெல்லியை விருத்தி செய்வது அவ்வளவு அவசியமானதா என்ன?

சைத்தான் யுக்தி

காரஜியேல் எழுதிய சிறு கதை.

[அயான் காரஜியேல் (Ion Caragiale) ருமேனியா தேசத்து நாடகாசிரியன். சிறு கதை எழுதுவதிலும் புகழ்பெற்றிருந்தான். அவன் காலத்தில் (1852-1912) பத்திரிகை யுலகமும் இலக்கிய அறிவும் வரவரக் கீழ்த்தரமாய்ப் போய்க் கொண்டிருந்தன. அதைக் கேலி செய்து அவன் எழுதிய சிறு கதை இங்கு மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.—சங்கு. ஸுப்ரஹ்மணியன்.]

ஒரு ஞாயிற்றுக் கிழமை காலை வேளையில் சைத்தான் கடவுள் வீட்டுக்கு வந்து, அவரைப் பேட்டி கண்டான்.

"ஸ்வாமி! இந்த மனிதர்களைக் கட்டிக் கொண்டு நீங்கள் ஏன் அழுகிறீர்கள்? அந்தப் பயல்களைப் போன்ற உதவாக்கரை ஜன்மங்கள் இல்லையல்லவா? அவர்களை என்னிடம் விட்டு விட்டுச் சும்மாத் தூங்குங்கள். அந்த மட்ட ஜன்மங்களைக் கட்டிக் கொண்டு நீங்கள் மாரடிப்பானேன்?" என்றான் சைத்தான்.

கடவுள் அப்போது ஏதோ ஆலோசனையி லிருந்தார். ஆகவே சள்ளென்று விழுந்தார். "போடா அயோக்கியா! நான் படைத்த நல்ல ஜந்துக்களைத் தூஷிக்க இந்த நல்ல நாளைப் பார்த்தாயோ? அவர்களை யெல்லாம் படைத்தவன் நான்தா னென்பதை மறந்து விட்டாயோ?" என்றார் கடவுள்.

"பிரபோ! தாங்கள்தான் படைத்தீர்களென்பதை நானறிவேன். ஆனால் அவர்கள் மண்டையை மட்டும் கோணலாக்கி விட்டீர்கள். ஆதலால்தான்...."

"சீ! சீ! சும்மா வம்பளக்காதே. எனக்குக் கோபமூட்டாதே. கோள் சொல்வதுதான் உனது வேலையோ. மனிதர்கள் முட்டாள்களென்று சொன்னாயே, அதைப் போன்ற பொய் உண்டா?"

"பிரபோ! தங்களுக்கு விஷயம் தெரியாததற்குக் காரணம் தாங்கள் பூலோகத்துக்குப் போய் வசிப்பதில்லை. ஆனால் எனக்கோ பூலோக அநுபவமுண்டு."

"ஹா, அப்படியா! நீ பூலோகத்துக்குப் போய்விட்டு வந்தாயா?"

"ஸ்வாமி! என் பிழைப்பே பூலோகத்தில்தானே யிருக்கிறது. மனித வர்க்கம் விழித்துக் கொண்டிருக்கும் போதும், தூங்கும் போதும் சதா அவர்களோடேயே நான் இருந்து கொண்டிருக்கிறேன். அவர்களைக் காப்பாற்றுவதும் நான்தான்; வழி காட்டுவதும் நான்தான். ஆனால் என்ன செய்தாலென்ன, கடைந்தெடுத்த முட்டாள்களாக இருக்கின்றார்கள். என்ன சொல்லிக் கொடுத்தாலும் களிமண் தலைகளில் ஏறமாட்டா தென்கிறது" என்று கூறினான் சைத்தான்.

சைத்தான் கூறிய இந்த வசனங்களைக் கேட்டுக்கொண்டு அருகே யொரு பக்தர் நின்றிருந்தார்.

"டே, சைத்தாரப் பயலே! உன் வம்புகளைக் கேட்பதற்குக் கடவுள் தயாரா யில்லை. நீ சொல்வதை நிரூபிக்க உதாரணம் காட்டிவிட்டுப் பிறகு பேசு. சும்மா இங்கே வாயடி அடிக்க வந்தாயானால், வாலை ஒட்ட அறுத்து விடுவோம்; ஜாக்ரதை" என்றார் பக்தர்.

சைத்தான் என்ன செய்வான், பாவம்! வால் போய்விடுமோ வென்று அவனுக்குப் பயம். "உங்களுக்கு நிரூபணம் வேண்டுமா? இதோ காட்டுகின்றேன்" என்று கூறிவிட்டு, குண்டோட்டமாய்ப் பூவுலகத்திற்கு ஓடி வந்தான்.

இரண்டு நதிகளுக்கிடையே ஜர்மனி தேசத்தில் ஓர் பட்டண மிருந்தது. மாலை வேளையில் ஜனங்கள் எல்லோரும் ஜப தபங்கள் செய்து கொண்டிருந்தனர். ஆகவே எல்லாம் முடியு மட்டும் வாலை யடக்கிக்கொண் டிருந்துவிட்டு நிச்சப்தம் ஏற்பட்டதும் சைத்தான் பட்டணத்துள் நுழைந்தான். கொஞ்ச தூரத்தில் போய்க் கொண்டிருந்த ஒருவனை விளித்து "ஐயா எங்கே போறீங்கோ?" என்று பேச்சுக் கொடுத்துக் கொண்டே நடந்தான்.

சிறிது நேரத்தில் அந்த மனிதனும் சைத்தானும் நெருங்கிய நண்பர்களாகி விட்டனர். இரகஸ்யமான ஓரிடத்துக்கு அந்த நல்ல மனிதனை அழைத்துச் சென்று, சைத்தான் என்னமோ காதில் ஓதினான். உபதேசம் செய்த பின்பு சைத்தான் மாயமாகி விட்டான்.

பாவம்! அந்த நல்ல மனிதனுக்கு அன்று இராத்திரி முழுதும் தூக்கமேயில்லை. என்னவோ மூளையைக் குடைந்து கொண்டே யிருந்தது. மறு நாளும் தூக்கம் பிடிக்கவில்லை. ஒரு இமைகூடக் கண்மூட மறுத்துவிட்டது. எண்ணங்களோடும், யுக்திகளோடும், ஆராய்ச்சியோடும் அவன் குஸ்தி போட்டுக்கொண் டிருந்தான். நல்ல நல்ல எண்ணங்களையெல்லாம் வீசி யெறிந்து கொண்டும், போக்கிரித்தனமான கருத்துக்களை யெல்லாம் பொறுக்கிச் சேர்த்துக் கொண்டும் அவன் பல மாதங்களைக் கழித்தான். அத்தனை தீர்க்காலோசனைக்குப் பிறகு, அவன் யுக்தியினின்று ஓர் சாமான் பிறந்தது.

அதுதான் அச்சுக்கூடம்!

பிடி அந்தப் பேப்பரை!—வை அதன்மேல் எழுத்தை! அழுத்து—ஹா அச்சடிப்பது இவ்வளவுதானா!

அந்த யந்திரம் வெகு மெதுவாகச் சென்றுகொண் டிருந்தது. ஒளிந்து பார்த்துக் கொண்டிருந்த அந்தச் சைத்தானுக்கு வேகம் போதாதென்று தோன்றிற்று. தன் வாலை அந்த யந்திரத்தில் நுழைத்து விர் விர் ரென்று சுற்ற ஆரம்பித்தான். ஆஹா! என்ன வேகம்! என்ன வேகம்! மணிக்குப் பத்து லட்சம் கடுதாசி வீதம் அடிக்கும் வரையில் சைத்தானின் ஆசை தீரவில்லை. ஒரே மணியில் 10 லட்சம் கடுதாசிகளை அச்சடித்து, கணக்கிட்டு, விலாசமெழுதி, ஸ்டாம்பு ஒட்டி, ரயிலில் ஏற்றி, மணிக்கு 90 மைல் வீதம் ரயிலையும் ஓடச் செய்து சைத்தான் ஆனந்தக் கூத்தாடினான்.

ஒரு நாள் கடவுள் சந்நதியில் அந்தப் பக்தர் யோகம் செய்து கொண்டு அமர்ந்திருந்தார். தூரத்தில் ஏதோ பயங்கரமான புகை எழுந்தது.

"ஹா என்ன அது? என்ன அது?"

அதுதான் சைத்தானின் புதிய தோற்றம். வண்டி வண்டியாகக் கடுதாசிப் புத்தகங்களை—பைபிள்கள்—வேதங்கள்—வேதாந்தங்கள்— சட்டங்

கள்—பத்திரிகைகள்—மாலிகைகள்—எல்லாவற்றையும் மேலே ஆடையாக அணிந்து கொண்டு சைத்தான் வந்து குதித்தான்.

கடவுள் அவனது புது வேஷத்தைக் கண்டு "என்னடா இது?" என்று கேட்டார்.

"சுவாமி! மனுஷர்களின் முட்டாள் தனத்துக்கு நிரூபணம் கேட்டீர்களே; வந்திருக்கிறது. எல்லாம் கொண்டு வந்திருக்கின்றேன். பக்தரே. தாங்களும் பாருங்கள்" என்று கூறி விட்டு, சைத்தான் தனது சரக்குகளைக் காட்ட ஆரம்பித்தான்.

பக்தருக்கும் கடவுளுக்கும் என்ன சொல்வதென்று தெரியவில்லை. விழித்த கண் கொட்டாமல் பார்த்தனர்.

"ஸ்வாமி, நான் அப்போது சொன்னது வாஸ்தவம்தானே!" என்றான் சைத்தான்.

கடவுள் ஒன்றும் பதில் சொல்லவில்லை.

"பக்தரே, நான் அப்போது சொன்னது நிஜம்தானே!" என்று கேட்டான் சைத்தான்.

அவரும் மௌனத்தோடு தலை குனிந்தார்.

சிறிது நேரம் கழித்து, கடவுள், "அப்படியானால் என்ன செய்யவேண்டுமென்கிறாய்?" என்று கேட்டார்.

"அந்த மனித ஜாதியை என்னிடம் விட்டு விடுங்கள். எனக்காவது பொழுது போகட்டும்" என்றான் சைத்தான்.

"சரி, எடுத்துக்கொள்!" என்று சொல்லிவிட்டுக் கடவுள் தாம் வேறு வேலை பார்க்கத் தொடங்கினார். சைத்தான் குஷியோடு பூலோகத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தான். அப்போது அந்த பக்தர். "டே! டே! உன்னைத் தாண்டா. இதென்ன ஒரு பெரிய மலை மாதிரி ஏதோ சாமான்களை யெல்லாம் போட்டுவிட்டுப் போகிறாய். எடுத்துச் செல். இங்கே குப்பை போடக்கூடாது, கபர்தார்!" என்றார்.

உடனே சைத்தான் தனது வாலைக் குழைத்து அடக்கிக் கொண்டு அத்தனை கடுதாசிகளையும் வாரிச் சுருட்டிக்கொண்டு பூலோகத்தில் கொண்டு வந்து எறிந்தான். அதுதான் எங்கு பார்த்தாலும் கடுதாசி மயமாக உலகம் ஆகிவிட்டது. மனிதனுக் கேற்பட்ட புதிய மூளையைக் 'காலம்' என்ற கறையான் தின்று விடாது தடுக்கும் பூச்சியுருண்டைகள் மாதிரி பத்திரிகைகளும், புத்தகாலயங்களும் காவல் புரியத் தலைப்பட்டன.

சர்க்கரை உதாரணம்

உலகத்தில் எந்த தேசத்தானாவது எதையேனும் உற்பத்தி செய்தானானால் அதில் எவ்வளவு மூட்டைகளை இந்தியாவில் கொணர்ந்து தள்ளலாமென்றே முதலில் கணக்குப் பார்க்கின்றான். அந்நியரின் போட்டியைத் தடுத்து, சுதேசித் தொழில்களுக்கு உதவி செய்யத் திரைத்தனத்துக்குத்தான் சக்தியுண்டு. அதன் கடமையும் அதுவே. அம்மாதிரி அநேக தொழில்களுக்கு உதவுவதற்குத் தற்போதுள்ள அரசாங்கம் சுணங்கிக் கொண்டிருப்பது வெட்கக் கேடான விஷயம். இறக்குமதியாகும் அந்நியச் சரக்குகளின்மீது அதிகச் சுங்கவரி விதித்தால் அதனால் அந்நியரின் அநியாயப் போட்டியைத் தடுக்க முடியும் என்பதற்கு ஒரு சிறந்த உதாரணம் கிடைத்திருக்கிறது.

இந்தியாவில் இறக்குமதி யாகும் ஒவ்வொரு சர்க்கரை மூட்டைக்கும் (112 பவுண்டு எடை) 9 ரூபா சுங்கவரி என்று நிர்ணயித்த பின்பு சுதேசிச் சர்க்கரைத் தொழில் வெகு மும்முரமாக முன்னேறியிருக்கிறது. சுமார் 15 கோடி ரூபாயை இந்திய முதலாளிகள் சுதேசித் சர்க்கரைத் தொழிலில் போட்டிருக்கின்றனர். ஆங்காங்கு ஆலைகளும் கரும்புத் தோட்டங்களும் தோன்றுகின்றன. அந்நியச் சர்க்கரை இறக்குமதியும் வரவரக் குறைந்து கொண்டே வருகிறது. 1928-ம் வருஷத்தினின்று அந்நியச் சர்க்கரை இறக்குமதி எவ்வளவு வேகமாகக் குறைந்துவருகிறது என்பதற்குக் கணக்கும் காட்டலாம்.

1928-29	ஞல்	16	கோடி	9	லக்ஷ	ரூ.
29-30	,,	15	,,	78		,,
30-31	,,	10	,,	98		,,
31-32	,,	6	,,	17		,,
1932-33	,,	4	,,	23		,,

கணக்குகள் நேருக்கு நேர் நின்று பேசுகின்றன. இந்த ஒரு தொழிலுக்குக் காட்டியுள்ள சலுகையை இதர சுதேசித்தொழில்களுக்கும் அரசாங்கம் காட்டுமானால் எவ்வளவு மேன்மையாயிருக்கும் தெரியுமா? ஒரு காலத்தில் துருக்கி தேசம் அந்நிய நாட்டுச் சர்க்கரையையே தின்று கொண்டிருந்தது. இப்போது அங்குள்ள அரசாங்கம் அந்நியச் சர்க்கரை அதிகமாக இறக்குமதியாகாத வண்ணம் தடுப்பதால் சுதேசித் தொழில் வேகமாக விருத்தியடைந்து வருகிறதாம்.

இந்தியாவில் எதற்காக அந்நியத் துணி இறக்குமதி யாகவேண்டும்? அந்நியர்களிடமிருந்து உப்புக்கூட வரவேண்டுமா? ஒன்றுமில்லாத எலெக்ட்ரிக் பாட்டரிகள் வருஷா வருஷம் 20 லட்சம் ரூபாய்க்கு இறக்குமதி யாகிறதென்றால், இதை யாரிடம் சொல்லி அழுவது? இதையெல்லாம் அரசாங்கம் கவனிக்க வேண்டியது அதன் கடமை. இந்த உதவிகளைச் சுதேசித் தொழில்களுக்குச் செய்து தர அரசாங்கம் தயங்குமானால் அதன் போக்கைத் தான் குற்றங்கூற வேண்டியிருக்கிறது.

இந்தியாவில் மிகச் சிறந்தது

7
அளவுகள்
1, 2, 4, 6, 8, 12, 16
பேர்களுக்கு
ரூ. 10, 14, 18, 23, 29, 35, 41.
சிலோனில் முக்யமான ஊர்களுக்கு ஏஜண்டு தேவை.
!

சகல விதமான சமையலுக்கும் சர்வ சம்மதமாய், செலவுச் சுருக்கம் சிக்கனம், செம்மை உணவு ருசி, முதலிய எல்லா சௌகரியங்களும் பொருந்திய தெனச் சிறந்து விளங்கும்
ருக்மணி குக்கர்
சமையலடுக்கு உங்களுடைய வீட்டிலிருக்க வேண்டாமா?
விபர புத்தகம் இனம்.
ருக்மணி குக்கர் கம்பெனி
இராயபுரம்.(10), சென்னை.

குரு கோவிந்த சிங்கன்

(வ. வே. ஸு. அய்யர் எழுதியது)

[பூர்வ கதை:—தந்தை தேக பகதூரைக் கொன்ற மொகலாயரைப் பழிவாங்குவதற்காக, மகன் குருகோவிந்தன், சிஷ்யர் என்ற ஓர் வீரப்படை சேர்க்கிறான். குருவின் கோட்டையைப் பல மடங்கு எதிரிகள் முற்றுகை செய்கிறார்கள். கடும்போர் நடக்கிறது. சில சிஷ்யர்கள் பயந்து ஓடுகிறார்கள். அவர்களை "இம்மையிலும், மறுமையிலும் கதியற்றுப் போகக்கடவர்" என்று குரு சபிக்கிறான். யுத்தம் பின்னும் வலுக்கவே, கோட்டையை நீடித்துக் காக்க முடியாதெனக் கருதி, பெண்டிரையும், குழந்தைகளையும் வேறு புகலிடம் தேடிக்கொள்ளும்படி, குரு வெளியே அனுப்பிவிடுகிறான்.]

குழந்தைகளின் தியாகம்

இவ்வாறு அனுப்பப் பட்டவர்களுள் குருவின் இரண்டு சம்சாரங்களும், தாய் கூஜரி தேவியும், ஜொராவர சிங்கன், பத்தே சிங்கன் என்கிற இரண்டு கடைசிக் குமாரர்களும் இருந்தார்கள்.

போவதற்கு வேறு இடமின்றி இவர்கள் ஸரஹிந்துக்கே போக நேர்ந்தது. இவர்கள் ஸரஹிந்தில் இருந்த செய்தி சீக்கிரம் ஊரில் பரவி, சைனியத்துடன் ரணபூமிக்குச் சென்றிருந்த ஸுபேதார் வரையிலும் எட்டியது. இதைக் கேள்வியுற்றதும், குருவினது புத்திரரை முஸ்லீம்களாக்கி விட்டால் அவனது மானத்தையும் கௌரவத்தையும் வேரறுத்துப் போட்டதாகிவிடும் என நினைத்து, ஸுபேதார் பாசறையை விட்டு ஸரஹிந்தில் வந்து ஒரே குதியாகக் குதித்தான். குரு புத்திரர்களைத் தன் வசம் பிடித்துத் தருகிறவர்களுக்குப் பெரிய தோர் பரிசு அளிப்பதாகப் பிரகடனப் படுத்தி, பல ஆட்களை ஊருக்குள் அனுப்பி, கோவிந்தனுடைய புத்திரர்களைத் தேடிப் பிடித்து வரச் சொன்னான். எப்பேர்ப் பட்ட இயக்கத்திலும் எப்பேர்ப் பட்ட மகானைச் சுற்றியும் கூட, துரோகிகளும் சண்டாளர்களும் சேர்ந்து விடுகிறார்கள். ஏசுவினிடம் யூதஸன் * சேர்ந்திருந்தா னன்றோ! கூஜரி தேவி முதலியவர்களுக்குக் குரு துணையாக அனுப்பி யிருந்தவர்களில் ஒருவன் ஸுபேதார் பிரகடனப் படுத்தி யிருந்த பரிசுப் பொருளுக்கு ஆசைப் பட்டு, ஜொராவர சிங்கனையும் பத்தே சிங்கனையும் வெளியில் அழைத்துப் போவது போல அழைத்து வந்து சத்துருவின் வசம் காட்டிக் கொடுத்து விட்டான்!

உடனே ஒரு பெரிய தர்பார் கூட்டப் பட்டது. ஸுபேதார் ஆசனத்தில் அமர்ந்திருக்கிறான். குருவின் புத்திரர்களைக் காவலாளிகள் ஸுபேதாருக்கு முன்னே கொண்டு வருகிறார்கள். ஜொராவர சிங்கனுக்குப் பன்னிரண்டு வயதிருக்கலாம். பத்தே சிங்கன் அவனினும் மிகச் சிறுவன். ஆனால் அவர்கள் பயம் என்பதையே அறியாதவர்கள் போல நடக்கிறார்கள். அவர்களது பார்வையில் சிறிது கலக்கமேனும் அச்சமேனும் இல்லை.

* Judas.

தர்பாரில் நிச் சப்தம். அங்கே கூடியுள்ளவர்களுக்கு ஒவ்வொரு நிமிஷமும் ஓர் நாழிகை நேரத்தைப் போலக் காண்கிறது. கடைசியாக, குரு புத்திரர் ஸுபேதாருக்கு எதிரே நிற்கிறார்கள்.

ஸுபேதார் புருவத்தை நெரித்துக் கொண்டு கூறுகிறான்: "பிள்ளைகளே, நீங்கள் சக்கரவர்த்திக்கு விரோதமாகக் கொடி உயர்த்திப் போர் புரிகிற ஓர் ராஜத்துரோகியின் புத்திரர்கள். நீங்களும் அவனது படையிலே சேர்ந்து போரும் புரிந்திருக்கிறீர்கள். உங்களுக்கு மரண தண்டனை விதிப்பதுதான் நியாயம். ஆனால் நீங்கள் குழந்தைகளாதலால் உங்கள்மீது எனக்கு இரக்கம் வருகிறது. அதனால் இம்மைக்கும் மறுமைக்கும் பயன் தரக்கூடிய இஸ்லாம் தர்மத்தை நீங்கள் தழுவுவதாக இருந்தால், உங்களை மன்னித்துவிட எண்ணியுள்ளேன். என்ன சொல்லுகிறீர்கள்?"

ஜோராவர்:—"ஸச்சா பாதுஷா வாகிற குரு கோவிந்த மகாராஜனை ராஜத்துரோகி என்று கூற உனக்கு எள்ளளவும் பாத்தியமில்லை. அவனே சத்தியத்துக்குச் சக்ரவர்த்தி; அறத்தினுக்கு அரசன். பாரத நாட்டில் தர்மத்தை நிலை நிறுத்துவதற்காகப் போர் புரிகிறவன். அவன் கடவுளுக்குத்தான் பணியாளனே யொழிய, பூமண்டலத்தி லிருக்கிற எத்தகைய சக்ரவர்த்திக்கும் உட்பட்டவ னல்லன். ஆகையால் அவன் என்றைக்கும் அங்கீகரியாத அரசனுக்கு அவன் எவ்வாறு துரோகியாக முடியும்? உங்கள் அரசாங்கம் தர்மமான அரசாங்கமாக இருந்திருக்கும் பக்ஷத்தில் எங்கள் குருவும் தந்தையுமான கோவிந்த சிங்கன் உங்களுக்குத் துணையாக இருந்து வாழ்ந்திருப்பான். நீங்கள் நாட்டில் அதர்மம் புரிந்து வருகிறதாலேயே அவன் சிஷ்யர்களுடன் உங்கள் அரசை எதிர்த்துப் போர் புரிகிறான். எங்களைப் பொறுத்தமட்டில் எங்கள்மீது நீ இரங்க வேண்டாம். எங்களை நீ கொன்றுவிடலாம். உன் கையில் நாங்கள் அகப்பட் டிருக்கும்போது எங்களை நீ உன் இஷ்டம்போலச் செய்துவிடலாம். ஆனால் நாங்கள் எங்கள் தர்மத்தை விட்டு விடுவோம் என்று மாத்திரம் கனவில்கூட நினையாதே!"

சபையிலுள்ள அனைவரும் தங்கள் வாழ்நாளில் அது வரையில் கேட்டிராத ஸ்வரத்தையும் வார்த்தைகளையும் கேட்டுப் பிரமித்தார்கள்; அந்தப் பாலகனுடைய அஞ்சா நெஞ்சத்தைக் கண்டு வியந்தார்கள்; மேலே என்ன நடக்கப் போகிறது என்று கண் கொட்டாமல் உன்னிப்பாய், சர்வேந்திரியங்களிலும் ஜாகரூகர்களாய், பார்த்துக்கொண் டிருந்தார்கள். ஸுபேதாரும் மனதிலே அவர்களுடைய தைரியத்தை மெச்சினான். ஆனால் அவ் எண்ணத்தை அடக்கிக் கொண்டு பின் வருமாறு பேசினான்.

ஸுபேதார்:—"பிள்ளாய், பணிவாகப் பேசினாயானால் உயிர் தப்பலாம். இப்பொழுது பேசுகிற ஸ்வரத்தில் பேசினாயானால் உங்கள் உயிர் உங்களதல்ல. ஆனால் நீ சிறு பையனாகையால் உன்னை இன்னும் மன்னிக்கிறேன். நன்றாக யோசித்துப் பார். எதற்காகப் பிராணனை விடுகிறாய்? இஸ்லாம் மார்க்கத்தைப் பின்பற்று! பாதுஷா ஔரங்க

ஜேபின் தயவும் பேட்டியும் உனக்குச் சம்பாதித்துத் தருகிறேன். பாதுஷாவானவன் நீங்கள் பொய்ச் சமயத்தைவிட்டு நபிநாயகத்தின் மார்க்கத்தை ஏற்றுக்கொண்டு விட்டீர்கள் என்று கண்டதும் உங்களைத் தன் திருக்கையால் தழுவுவான். உங்களுக்கு உயர்ந்த கல்வி கற்பித்துத் தன் சைனியத்தில் சிரேஷ்டமான தளபதி ஸ்தானங்களும் கொடுப்பான். உயர்ந்த பிரபுக்களின் வம்சத்தில் பிறந்த, ஹௌரிகள் போல அழகு வாய்ந்த, பெண்களை உங்களுக்கு விவாகம் செய்துவைப்பான். ஆபரணங்களும் உடைகளும், வீடுகளும் உத்தியானங்களும் உங்களுக்கு ஏராளமாக அளிப்பான். ஆகையால் உங்கள் தந்தையோடு சோறு தண்ணீரில்லாமல் காடு காடாய் ஓடிஓடிக் கடைசியில் ஏகாதிபத்திய சிப்பாய்களின் வாட்களுக்கு இரையாகாமல் இப்பொழுதே* கலமாவைச் சொல்லிவிடுங்கள்."

ஜோராவர்:—"ஸத் ஸ்ரீ அகால்! வாஹ குருகி பத்தே! யாரென நினைத்து எங்களிடமிவ்வார்த்தைகள் பேசுகிறாய்? சிங்கத்தின் குருளைகள் புல்லுக்கு ஆசைப்படும் என மதிக்கிறாயா? எங்கள் குருவினுடைய வேலைக்காரனது வேலைக்காரன்கூட ஔரங்கஜேபின் சைனியத்தில் தளபதி ஸ்தானத்தை விரும்பான். உங்கள் ஷாஹம் ஷாவின் தயவை லட்சியம் செய்யான். அப்படியிருக்க, எங்களையா இந்த அற்பத்தினும் அற்ப விஷயங்களுக்காகக் கலமா சொல்லச் சொல்கிறாய்? சபாஷ்!"

ஜொராவர் இவ்வாறு பேசிடவே ஸுபேதாருக்கு உக்ரமான கோபம் வந்துவிட்டது. உடனே வேலைக்காரனிடம் சொன்னான்: "பாம்பின் வயிற்றில் பாம்புதான் பிறக்கும், அன்றோ? கொத்தனை அழைத்து வந்து, இந்த ராஜத்துரோகிகளைச் சுவரோடு சுவராய்ச் சேர்த்துச் சுற்றிச் செங்கல் வைத்துச் சுவர் எழுப்பச் சொல்."

கொத்தன் வந்தான். பாலர்களைச் சுவரோடு சேர்த்து நிறுத்தினான். காலிலிருந்து செங்கல்களும் சுண்ணாம்பும் வைத்துச் சுவர் எழுப்பத் துவக்கினான்.

பாலர்கள் அலட்சியமாக நின்றார்கள். தர்மத்தின் கௌரவத்தைக் காக்கும் பாக்கியம் தங்களுக்கு இச் சிறு வயதிலேயே கிடைத்தது என்று இருவரும் கர்வங் கொண்டார்களே யொழிய, அவர்கள் மனதில் லேசா லேசம் கூடத் துக்கம் என்பது இல்லை. மனதைக் குருவினது சரணாரவிந்தங்களில் நிறுத்தி, அகால புருஷனைத் தியானித்துககொண்டு, ஜொராவரும் பத்தேயும் பேரானந்தத்தில் மூழ்கி நின்றார்கள். கல் ஏற ஏற அவயவங்களில் வலியும் கடுப்பும் ஏறுகிறது. கல் இடுப்பு வரையில் வந்துவிட்டது—வயிற்றைச் சுற்றியும் வைககப்படுகிறது. அப்பொழுது ஸுபேதார் கொத்தனை நிறுத்தச் சொல்லி, "இப்பொழுதேனும் பொய் மார்க்கத்தை விட்டோம் என்று சொல்லுங்கள்; கல்லைப் பிரித்தெடுத்துவிட்டு உங்களை விடுவிக்கிறேன்" என்கிறான். ஆனால் நமது பாலர் வஜ்ரத்தைப்போல அழுத்தமாகவே நிற்கிறார்கள். ஸத் ஸ்ரீ அகால் என்கிற கோஷம் தான் அவர்களது திருவாயினின்று வருகிறது. "மேலே கட்டுங்கள்" என்று சமிக்கினை செய்கிறான் ஸுபேதார். கொத்தன் கட்டிக்கொண்டே போகையில் பத்தே சிங்கனுக்குத் திணற ஆரம்பித்துவிட்டது. அவன் மனந் தளரப் போகிறான் என்று ஜொராவர சிங்கன் அவனைப் பார்த்து, "பயப்படாதே பத்தே!" என்று சொன்னான். அவ்வார்த்தைகளைக் கேட்டதும் பத்தேசிங்கன் கர்வத்துடன், "யாரைப் பார்த்து, அண்ணா, பயப்படாதே என்று சொல்லுகிறாய்? நான் குரு மகாராஜாவின் புத்திரன் என்பதையும் சிஷ்யன் என்பதையும் மறந்துவிட்டாய் போலும்! நான் அதை ஒரு நாளும் மறவேன்: குரு மகாராஜாவின் உபதேசங்களும் அவனது அன்பும் எனக்கு அச்சம் என்றால் என்ன என்றுகூடத் தெரியாமல் செய்துவிட்டன: இந்த உடலையும் உயிரையும் சத்தியத்துக்காகவும் தர்மத்துக்காகவும் ஆகுதியாகக் கொடுப்பதைவிட உயர்ந்த பதவி ஏதேனும் உண்டோ? இன்னும் நான்கு செங்கற்கள் ஏறினால், என் ஜீவன் அகால புருஷனிடம் சென்றுவிடும்! அதைவிட எனக்கு வேறு ஆனந்தம் ஏது? ஆகையால் இந்தத் துஷ்டர்கள் செய்கிற ஒவ்வொரு தீமையும் என்னுடைய நன்மைக்காகவே என்பதை நன்கு உணர்ந்துகொண்டு இதோ இந்த உயிரை அகால புருஷன் கையில் ஒப்பித்துவிட்டேன். நாம் இருவரும் இந்தச் சரீரத்தை விட்டுவிட்டு ஏககாலத்தில் அகால புருஷனுடைய சன்னிதானத்துக்கு இணை பிரியாமல் செல்லுவோம்: எனக்காக நீ கவலைப்படாதே!" என்றான்.

ஸுபேதாருக்குக் கோபமும் மூர்க்கத் தனமும் அதிகமாகிவிட்டன. அதிவேகமாகக் கல்லை ஏற்றிக் கட்டுங்கள் என்று ஆக்ஞாபித்தான். குழந்தைகளின் ஒவ்வொரு இந்திரியமும் வரிசையாக உணர்ச்சியிழந்து வந்தது. கடைசியாக அவர்களுடைய சரீரம் செங்கற்களுக்குள் முற்றிலும் புதையுண்டது. அவர்களது அன்றலர்ந்த மலர்போன்ற ஆத்மாக்கள் பத்தே சிங்கன் கூறிய பிரகாரம் இணைபிரியாமல் ஈசுவரனுடைய பாதாரவிந்தங்களில் போய்ச் சேர்ந்தன.

குரு புத்திரர்களைக் கொன்று விட்டதிலிருந்து பெரியதோர் வெற்றி பெற்றுவிட்டதாக ஸுபேதார் நினைத்துக்கொண்டான். ஆனால் எந்தக் காலத்திலும் ஆத்மத் தியாகிகளின் இரத்தம் அவர்களுடைய தர்மத்தை வளர்க்கும் ஜீவதாரை யாகிறது. ஆகவே இவர்களுடைய ஆத்ம பலிதானத்தையும் கடைசி வரையில் அவர்கள் காட்டிய தைரியத்தையும்பற்றிக் கேள்வியுற்ற போது கோவிந்தசிங்கனுக்குத் துக்கம் உண்டாகவில்லை—மற்று, அவன் தோள் பூரித்தது. தன் புத்திரர்கள் சிஷ்ய தர்மத்தின் மானத்தைக் காத்தார்கள் என்ற எண்ணமும், தன்னுடைய கீர்த்தியை மாசில்லாமல் செய்தார்கள் என்ற எண்ணமும், தங்களுடைய கீர்த்தி பூலோகம் உள்ளளவும் நிலை நிற்கும்படி செய்துகொண்டு விட்டார்கள் என்ற எண்ணமும் அவனுக்குப் புத்திர சோகமே இல்லாமற் செய்துவிட்டன. அது மாத்திரமா? அவனைச் சூழ்ந்துள்ள நாற்பது பேர்களுக்கும் அந்தச் செய்தி ஆயிரம் யானைகளின் பலமும் ஆயிரம் சிங்கங்களின் அஞ்சாமையும் கொடுத்து விட்டது.

[கதையின் தொடர்ச்சியை அடுத்த இதழில் பார்க்கவும்.]

* லா இலாஹி இல்லல்லாஹ; முஹம்மது ரஸூல் அல்லாஹ; என்ற சூத்திரம்.

அன்றும், இன்றும்

THE CONTRAST



—*Courtesy :* The Presidency College Magazine.

திருவிழாக் கூட்டத்தில்

அவன்:—டே, யாரையப்பா தள்றே?

இவன்:—எனக்கு நீங்கள் யார் என்று தெரியாது அய்யா? உங்கள் பேரு சொல்லுங்க. யாரைத் தள்றேன்னு சொல்றேன்.

* * *

அவள் :—இதோ இந்தக் கஷாயத்தைப் பத்து நிமிஷ நேரம் கொதிக்க வைத்துத் தரவேண்டும்—தெரிகிறதா?

அவள் :—இதோ அரை நிமிஷத்தில் தந்துடறேன்.

காவற்காரன் :—இந்தக் கொளத்திலே குளிக்கக் கூடாது என்று முனிஸிபாலிட்டி சட்டம், தெரியுமா? ஏறுமையா கரையிலே.

குளிப்பவன் :—அப்படியா! தெரியாது இறங்கிவிட்டேன். அப்போதே நான் வேஷ்டி அவிழ்த்து வைக்கும் போதே சொல்லியிருக்கக் கூடாதா?

காவ :—'வேஷ்டியை அவிழ்த்து வைக்கக் கூடாது' என்று சட்டத்தில் இல்லை யையா?

தமாஷ்!

மாஜிஸ்திரேட் :—நீ என்ன தமிழனா தெலுங்கனா?

கைதி :—அதுதான் சந்தேகம். என்னப்பன் தமிழன். ஆத்தாள் தெலுங்கச்சி. பிறந்தது வடக்கே பாட்னாவில். கல்யாணம் பண்ணிக் கொண்டேன் மலையாளப் பெண்ணை. மகாராஷ்டிர தேசத்தில் வியாபாரம் செய்துகொண்டிருந்தேன். குஜராத்தில் கைதியானேன்? எதைச் சொல்வது?

* * *

"அம்பி! இந்த ஹோட்டலில் எல்லாம் வெகு சுத்தமா யிருக்கும்போலிருக்கிறதே!"

"ஆம் ஸார்; அதை எப்படி ஸார் கண்டு பிடிச்சேள்?"

"எதைத் தின்றாலும் ஸோப் வாசனை அடிக்கிறதிலிருந்து கண்டு பிடிச்சேன்"

* * *

எஜமான் :—வேலை தெரியாதுங்குறே; சம்பளம் மாத்திரம் அதிகமாகக் கேக்கறையே.

அவன் :—அதுனாலேத்தான். வேலை, தெரிஞ்சா சுளுவிலே முடியும். வேலை தெரியாத்துனாலே ரொம்ப நேரம் கஷ்டப்படணுமில்லையோ; ஆகவே கூலியும் அதிகமாகத்தான் தரணும்.

* * *

தரகர் :—என்ன! நம்ம பெண்ணை யாருக்குக் கொடுக்கப் போகிறீர்கள்? ஹைதராபாத்திலிருந்தும் சிங்கப்பூரிலிருந்தும் நல்ல பையன்கள் வந்திருக்கின்றனர். ஒருவனுக்கு வயது 25. பெண் கொடுப்பவருக்கு 500 ரூபா தருவதாகச் சொல்கிறான். இன்னொருவனுக்கு வயது 30, அவன் பெண்ணின் தந்தைக்கு 1000 தருவதாகச் சொல்கிறான். அடுத்தாற் போல 35 வயதுக்காரன் 1500 தருவான். அப்புறம் 40 வயதுக்காரன் 2000 தருவதற்கும் தயார். யார் உங்களுக்குத் தேவை?

பெண்ணின் தந்தை :—45, 50 வயதில் ஒரு பையனும் கிடைக்காதா?

* * *

அவள்:—நாளைக்கு ஒரு லெட்டர் எழுதி அதில் "பெரிய பயித்தியம்; சென்னை" என்று விலாசம் எழுதிப் போட்டேனானல் சென்னைத் தபாலாபீஸ்காரர்கள் என்ன செய்வார்கள்?

நண்பன்:—திரும்பி உன் விலாசத்துக்கே அனுப்பி விடுவார்கள்.

"போ முன்னே!"

(இத்தாலிய சர்வாதிகாரி முஸ்ஸோலினி எழுதிய ஒரு கட்டுரையின் சுருக்கம்.)

முன்னேற்ற மடைவதுதான் மனித வாழ்க்கை. மனிதன் சுழலவேண்டும்; எக்காரியத்தையும் தாக்க வேண்டும்; முழுப் பலமும் வரும்வரை சுவாஸம் வாங்கவேண்டும். சும்மா இருப்பதால் சக்தி வருவதில்லை. வளர்ச்சியைக் கெடுப்பது சோம்பேறித்தனம். ஆயுளை எவ்வளவுக் கெவ்வளவு உபயோகிக்கின்றோமோ அவ்வளவுக் கவ்வளவு வருமானம். அதை அறியாது வாழ்வோமானால் அவ்வளவும் நஷ்டம். சரீரத்தை உபயோகிப்பதனால் பலம் அதிகரிக்கும். அதைச் சோம்ப விடுவதால் சாவே நெருங்கும்.

'தலை விதி' 'தலை யெழுத்து' என்று சொல்லிக்கொண்டு கிழக்கு நாடுகள் தூங்கிக்கொண் டிருக்கின்றன. இயற்கையை எதிர்க்க வேண்டாமென, விதியை நம்புகின்றவன் சொல்லுகின்றான்; உலகத்தையே சூழ்ந்திருக்கும்படியான அமானுஷீக சக்தியை எதிர்ப்பதால் பயனில்லை யென வாயைப் பிதுக்குகின்றான். அவன் ஜயத்தில் இச்சை கொள்ளலாகாது; தோல்வியை ஒப்புக் கொண்டே தீரவேண்டும். 'அதிர்ஷ்டம் கொண்டுவரட்டும்' என்று ஜபம் செய்துகொண்டு, அவன் ஒரு மூலையில் கிடக்கவேண்டியதுதான்.

அட்லாண்டிக் மகா சமுத்திரத்தின் மத்தியில் பெரும்புயல் வீசும் நேரத்தில் ஓர் கப்பல் தத்தளித்துக்கொண் டிருப்பதாக வைத்துக் கொள்வோம். அப்போது அந்தக் கப்பல் தலைவன், "இயற்கையை என்னால் எதிர்க்க முடியாது; அதிர்ஷ்டம்போ லாகட்டும்" என்று சொல்வானா? அவ்வாறு ஒரு கப்பல் தலைவனும் சொல்வதில்லை. அவன் இயற்கையை எதிர்த்து மல் யுத்தம் புரிகின்றான். எப்படியோ அந்தப் புயலைப் பிளந்துகொண்டு தன் கப்பலைத் துறைமுகத்துக்குக் கொண்டு போய்ச் சேர்த்துவிடுகின்றான்.

ஆத்ம வலுவும், தேக பலமும், பிடிவாதமான பயிற்சியினாலும், போராடுவதானாலுமே வளர்பவை. நகர்ந்து கொண்டே யிருப்பதுதான் இயற்கையின் சூக்ஷ்மம். வெறுமனே யிருந்துவிடுவதால் நமது சரீர பலமும், ஆத்ம பலமும் ஒருக்காலும் விருத்தியடையாது. அவ்வாறு பழகாவிட்டால் ஏதாவது மனத்தைக் குடைந்துகொண்டே இருக்க, மூலையில் உட்கார்ந்து உட்கார்ந்து மரித்துப்போக வேண்டியதுதான். இல்லாவிடில் இன்பமென்ற சோம்பேறிக் கட்டிலில் கிடக்கவேண்டியதுதான். கட்டுப்பாடு, பழக்கம், உபயோகம் முதலியவைகளே சக்தியை அதிகரிப்பன. சக்தி சக்தியை உண்டாக்குமென்பதே சாத்திரம்.

தீவிரமான மூளை தேர்ந்த உடலிலேயே வசிப்பது. உடலை அபிவிருத்தி செய்தால்தான் தெளிவான புத்தியும் ஏற்படுவதற்கு இடமுண்டு. மூளை இருக்குமிடம் நமது சரீரம். ஆதலால் அந்தச் சரீரத்தைச் சரியாகப் பாதுகாப்பதனால் மூளையையும் பாதுகாப்பவராகின்றோம். தேக திடமே உலக வாழ்க்கையின் ஆசீர்வாதமாகும்.

தேக ஆரோக்கியத்தைக் காப்பது வேலை; சுழற்சி மிகுந்த வேலை; சலியாத வேலை; கட்டுப்பாடு மிகுந்த வேலை; உணர்ச்சி யூட்டும் வேலை. ஆரோக்யமான சரீரம் ஏதாவது செய்து கொண்டே யிருக்கத் தூண்டுவது. ஆரோக்யம் தான் வேலை செய்யும்படி உடலை ஏவுவது. அப்போது மனம் அதை வேடிக்கை பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்கும். கொஞ்சமாவது பற்றுத லில்லாமல் கட்டுப்பாடாக இந்தத் தேகம் உழைத்துக்கொண் டிருப்பது, மனதுக்கு ஓர் வேடிக்கை யல்லவா?

தேகாரோக்யத்திற்கு அஸ்திவாரம் போன்றது 'பழக்க' வழக்கங்கள். கெடியாரம் போல உடலை ஆட்டிவைப்பதும் 'பழக்கம்' தான். கொஞ்சமேனும் ஆலோசனை செய்யாது உழைக்கும் சிப்பாயைப்போன்று உடலை ஆட்டி வைப்பதும் 'பழக்கம்' தான். குழந்தைகளை வளர்ப்பதில் இந்தப் 'பழக்கம்' என்ற பொக்கிஷத்தை நாம் கொடுக்க வேண்டும். வேலையில் 'பழக்கம்', குணதிசயங்களில் 'பழக்கம்', சுத்தமாக இருக்கப் 'பழக்கம்', உணவுகளில் 'பழக்கம்' முதலியவை இன்றியமையாதனவாகும்.

நல்ல தூக்கம், தேகப்பயிற்சி, சரியாகச்சுவாஸம்விடுதல் முதலியன தேகாரோக்யத்துக்கு அவசியமானவை. நாக்குக்கு உருசி வேண்டாமென்று நாம் நம்மைப் பழக்கிக்கொள்வதும் வெகு சுலபமான காரியமே. வாழ்நாள் முழுதும் நம்மைக் கட்டியாள்வது தொட்டிற்பழக்கமே யல்லவா?

இளைஞனா யிருந்தபோது பழகிப் பழகிச் சேர்த்துவைத்த உடல் வலுவைப் போக்கிக்கொள்ள ஒருவனும் விரும்ப மாட்டான். சும்மா இருந்தால் தொப்பை விழுமென்பதை அவன் அறிவான். ஒவ்வொரு மனிதனுக்கும் தன் உடலைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டுமென ஓர் இயற்கைக் குணம் உண்டு. ஆகாரங்களில் கட்டுப்பாட்டுட னிருக்க வேண்டுமென்பதை அறிவாளி அறிவான். ஆகார விஷயங்களில் எப்படி ஓர் ஒழுங்கு இருக்கவேண்டுமெனக் கூறுகின்றோமோ அவ்வாறே தேகப் பயிற்சிக்கும் ஓர் ஒழுங்கு ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். நவீன நாகரீகம் நமது தேக உழைப்பைக் குறைப்பதா யிருக்கின்றதென்பது வாஸ்தவம். அதற்காகவே தற்காலத்தில் மைதான விளையாட்டுகள் என்பன ஏற்பட்டுள. அவரவர் மனதுக்குப் பிடித்த விளையாட்டுகளை அவரவர்கள் ஆடலாம்.

ஆனால் அதற்குக்கூட 'வழக்கம்' என்பது அவசியமா யிருக்கிறது. அன்றாட அலுவல்களில் தேகப்பயிற்சியையும் ஒன்றாக நாம் செய்துகொள்ள வேண்டும். குதிரை சவாரி செய்வதையும், கத்தி விளையாடுவதையும் எனது தேகப்பயிற்சிகளாக நான் அனுஷ்டித்து வருகிறேன். எனக்குக் குதிரைகளிடத்தில் வெகு பிரியமுண்டு. தினம் ஒரு மணி நேரமாவது நான் சவாரி செய்வதுண்டு. தசைகளை ஒழுங்காக்கிக் கொள்வதற்காக அவ்வப்போது கத்தி விளையாட்டிலும் கலந்துகொள்வதுண்டு. தசைகளைச் சுறுசுறுப்பாகச் செய்வது கத்தி ஆட்டத்தின் பலனாகும். காலால் நடந்து செல்வதிலும் எனக்கு ஆசை யதிகம்.

திறந்த வெளியில் விளையாடுவதும், மிதமாக உண்பதும் மனிதனுக்குக் கிடைத்துள்ள பொக்கிஷங்கள். இந்த உடலை நேர்த்தியாக வைத்துக்கொள்ள விரும்பும் அறிவாளி அவைகளைப் பழகிக்கொண்டே யிருப்பா னென்பதில் ஐயமில்லை.

அழகு நம்பியா பிள்ளை

ஈ: கிருஷ்ணய்யர்

எழுதியது.

"மிருதங்கம் என்ற வாத்யத்தைப் புதிதாகக் கண்டு பிடித்தவன், இவ்வுலகத்தில் ஸாதாரணமாய்க் கிடையாத அதி புத்திமானு யிருந்திருக்கவேண்டுமென்று" கூறினர் நம் தேசத்திலுள்ள ஒரு பெரிய சாஸ்திர ஆராய்ச்சிக்காரர். வீணை, ஸரஸ்வதியைச் சேர்ந்ததாகவும், வேணு, (புல்லாங்குழல்) கிருஷ்ண பகவானுடையதாகவும் கருதப்படுவதுபோல், இம்மிருதங்கம் நந்திகேச்வருடைய பெயருடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. இது மத்தியில் பருத்து, இறுதிகளில் சற்றுக்குறுகிய உருண்டை மரக்குழலை இரு பக்கமும், தோலால் மூடி இறுகக் கட்டப்பட்ட தாளவாத்தியம். தாள வாத்தியங்கள் நம் தேசத்திற் பல இருக்கின்றன. அவைகளில் மிருதங்கமே சிறந்தது. இதிலிருந்து உண்டாகும் நாதமும் அதன் வகைகளும் மிகவும் இனிமையாயும் ருசிகரமாயு முள்ளவை; சுருதியில் நன்கு கலக்கக் கூடியவை. இவ்வாத்யம் நன்ருகச் சுருதி சேர்க்கப்பட்டிருக்கும்போது, கச்சேரியின் 'மேளக்கட்டு' ஆரம்ப முதலே நன்கு விளங்குவதோடு, பாடும் வித்வானுக்கும் உத்ஸாகத்தைக் கொடுக்கக் கூடியது. இனிமையான பலவகைப் பட்ட நாதங்களோடு, 'கும்கார' சப்தமொன்றும் அதிலிருந்து வெளிக்காட்டக்கூடியது. கச்சேரியை நன்கு போஷித்து ரஞ்சகம் கொடுக்கும் வாத்யம் இதுவே. தென்னிந்திய ஸங்கீதக் கச்சேரிகளில் இதுவே முக்யமான பக்கவாத்யமாக வெகு காலந்தொட்டு அமைந்து வந்திருக்கிறது. முன் காலத்தில் அதிகத் தேர்ச்சிபெற்றிருந்த நாராயண ஸ்வாமி அப்பா, துக்காராம் இவர்கள் கையில், இவ்வாத்யம் அதிகப் பிராபல்ய மடைந்தது. தாள வாத்யங்களின் பெரு மிதத்தினுலும், அட்டஹாஸத்தினுலும், ஸங்கீத தேவதை அழகு குன்றியிருக்கும் இக்காலத்திலும் கச்சேரிக்கு ரஞ்சகமாயும் அனுகுணமாயும் மிருதங்கத்தைக் கையாளுபவர் சிலர் இருக்கின்றனர். நாலைந்து வருஷங்களுக்குமுன் வரை ஸங்கீத ரஸிகர்களுக்கு எவருடைய மிருதங்க வாத்தியத்தில் அதிக மோஹமிருந்தது என்று கேட்டால், ஒரே பெயர்தான் பெரும்பாலும் சொல்லப்பட்டு வந்திருக்கும். அப்பெயர்தான் கும்பகோணம் அழகு நம்பியா பிள்ளை.

ஸ்ரீரங்கத்தில் பிறந்து கும்பகோணத்தில் வளர்ந்தார். ஸங்கீத வளர்ச்சியுள்ள குடும்பத்தில் உதித்தவர். அவர் பாட்டனுரான ஸ்வாமிநாத பிள்ளை ஒரு நல்ல வித்வானுக இருந்தார். அவர் மூதாதைகளில் ஒருவரான பொன்னையா பிள்ளை மிருதங்கத்தில் தேர்ச்சி பெற்றவர். ஆதியில் பிள்ளையவர்கள் சுமார் 18 வயது வரை 'சதிர்'க் கச்சேரிகளில் பக்கமேளம் வாசித்துப் பழகி வந்தார். அக்கச்சேரிகளில் பக்க மேளம் வாசிப்போரிடம் சில நல்ல விஷயங்கள் கண்டே தீரும். அக்கச்சேரியிலுள்ள பாட்டுகளுக்கு அடங்கி, பொருத்தமாயும் அழகாகவும் கோக்கப்பட்ட ஜதிகள் நிறைந்தே வாசிக்கும் தேர்ச்சி அதில் கிடைக்கும். ஏதாகிலும் பாட்டுகளின் 'பாவ'த்துக்கு விரோதமாக வாசிக்க அதிக இடமிருக்காது. இதன் நடுவில் சிறிதுகாலம் பிள்ளையவர்கள், பெயர் பெற்ற கல்யாணராமய்யர், கோனேரி ராவ் இவர்களுடைய நாடகங்களிலும் மிருதங்கம் வாசித்திருப்பதாகத் தெரிகிறது. பின்னர் நரஸிம்ம பாகவதர், கிருஷ்ண பாகவதர், நடேச தீக்ஷிதர், பஞ்சாபகேச பாகவதர் இவர்களுடைய காலக்ஷேபங்களில் பக்கவாத்யம் வாசித்து வந்தார். அவருடைய சாமர்த்தியமும் இனிமையான நாதத்துடன் வாசிக்கும் தன்மையும், எல்லோரையும் வசப்படுத்தி, கச்சேரிகளிலும் வாசிக்கும்படி இயற்கையாகவே தூண்டிவிட்டன. 22-லிருந்து 25 வயதுக்குள் அவர் கச்சேரிகளுக்கு வாசிக்கத் தொடங்கியதாகத் தெரிகிறது. அக்காலத்தில் மேற்கூறிய நாராயணஸ்வாமி அப்பா, துக்காராம் இவர்களுடைய வாத்யத்தையே நன்கு கவனித்து, தன்னைத் தானே பழக்கிக்கொண்டு முன்னேற்ற மடைந்தார்.

பிள்ளையவர்களுக்கு வயது இப்போது சுமார் 61 ஆகிறது. தடித்துக் குட்டையான சரீரம், கருப்பு நிறம், அப்பளாக் குடுமி, தற்காலம் கண்ணில் அவ்வளவு சூக்ஷ்மம் இல்லை. ஒரு தலைமுறை காலமாக (சுமார் 30 வருஷம்) கச்சேரி மேடைகளில் பிராபல்யத்துடன் விளங்கி வந்திருக்கிறுர். அவர் ஜாஸ்தியாகக் கச்சேரிகளுக்கு வந்து கொண்டிருந்த காலங்களில், மிருதங்கமென்ருல் அவர் மிருதங்கமே மேலாகக் கொண்டாடப்பட்டு வந்தது. அவர் மிருதங்கமில்லாத பெரிய கச்சேரிகள் குறைவு. அவர் பக்க வாத்தியத்தினுல் ஸந்தோஷமும், பெருமையும் அடையாத வித்வான்களு மில்லை. சுருக்கமாக, பக்கவாத்தியமென்ருல், அவர் மிருதங்கமே உண்மையான பக்க வாத்யமாக இருந்து வந்தது. எப்போதும் பாடகனைப் பின் தொடர்ந்தே வாசித்துவர முயலுவார். மட்டுக்கு மிஞ்சி, ஒரு போதும் போனதில்லை. தனி ஆவர்த்தங்கள் அழகு பொருந்தி யிருக்கும். ஏற்கனவே சுநாதம் படைத்த இவ்வாத்யம் அவர் கையில் அதிக அழகுடன் விளங்கி வந்தது. அவர் தொட்டதெல்லாம் இனிமை; ரஸிகர் கேட்டதெல்லாம் ருசிகரம். மிருதங்க வாத்தியத்திலிருந்து கிளப்பக்கூடும் நல்ல நாத வகைகளையெல்லாம் வெளிக்காட்டி வந்தார் என்றே சொல்லலாம்.

கச்சேரி மேடையில் சாந்தமாயும் அடக்கமாயும் வீற்றிருப்பார். 'ஸர்க்கஸ்' கச்சேரிகளானுலும் சரி, மற்றையதானுலும் சரி அவர் வாசிப்பில் வித்யாஸம் காணப்படாது. 'ஸர்க்கஸ்'க் கச்சேரிகளில் ஸாதாரணமாய்க் காணப்படும் காதைத் தொளைக்கும் அடிகள், ஆளைமிரட்டும் தடபுடல்கள் இவையொன்றிலும் அவர் ஸம்பந்தப்படுவதில்லை. 'நடைபேத'மோ, 'நெரவலோ' 'த-திங்-கி-ண-த்-தோமோ' எதிலும் மிருதுவாயும், ஸரளமாயும் வாசித்து வருவார். அவர் வாத்தியம் கச்சேரி ஸங்கீதத்தை ரஞ்சகப்படுத்தாது இருந்ததில்லை.

தாளத்தில் வெறிகொண்ட சிலர், கடினமான பல்லவிகளிலும், சிக்கலான சஞ்சாரங்களிலும், செப்படு வித்தைகளிலும், அதிமேதாவிகளாம் பெரிய நிபுணர்கள் வேலைசெய்யும் போதும், அஸாதாரண இடங்களிலிருந்து எடுக்கப்படும் பல்லவிகளில் துல்யமாய் எடுப்பு இடங்களில் வந்துசேரும் விஷயங்களிலும் அவர் கொஞ்சம் சிரமப்பட்டே வாசிப்பார் என்று சொல்லுவதுண்டு. உண்மையில் அச்சமயங்களில் யாருக்கும் சிரமமில்லாமலும், தடு

மாறுமலும் வாசிக்க இயலாது. அதிக கஷ்டம் படைத்ததெல்லாம் அழகிய உயரிய ஸங்கீத மென்றும் நினைத்துக் கொள்ள வேண்டாம். உண்மையான உயிரற்றுக் காதைத் தொளைப்பதும், பல்லுடைவது போலுமான, செப்படி வித்தைகளிலும், வாணவேடிக்கைகளிலும் அவருக்கு நம்பிக்கை எந்நாளும் இல்லை. இது ஒரு குறையானால், அக்குறையே நல்ல ஸங்கீதத்தை உத்தேசித்துள்ள உண்மை லக்ஷணமென்று சொல்லலாம். அவர் வாத்யத்தின் இனிமையான நாதம் காதில் நிறைந்திருக்கும்போது மற்றவைகளைக் கவனிக்கத் தோன்றாது. கச்சேரியில் ஒருவரிடமும் சண்டை போடுவதில்லை. ஏமாற்றம் மிரட்டுகள் இவைகளும் செய்வதில்லை. அழகுடைய தோற்றமடையாதிருந்தாலும், அவரைப் பார்த்தால், நல்ல குணமும், படாடோபமில்லாத மரியாதையும், அடக்கமும் கொண்டவராகவே காணப்படுவார். வயது முதிர்ந்து, சற்றுக் குன்றும் இக்காலத்திலும் அவர் வாசிப்பு, கேட்கத் தகுந்ததே. பல்லடம் ஸஞ்சீவிராவ் புல்லாங்குழல், வெங்கிடஸாமி நாயுடு பிடில், அழகநம்பி மிருதங்கம் ஆக இனிமை நாதங்கொண்ட இம்மூவரும் சேர்ந்த கச்சேரி ஒன்று இரண்டு வருஷத்துக்குமுன் ஒரு மஹாநாட்டில் நடந்தது என்றும் மறக்கக் கூடியதில்லை. தாளவாத்ய மென்பது ஸங்கீதத்தின் 'லய' பாகத்தைப் பொருத்தி வெளிக்காட்டும் உதவிக் கருவியேயானால்—தான் கூடியவரை ஸாதாரணமாய் ஆரவாரமில்லாது பின்னடங்கி, நெருங்கி ஒத்துழைத்து, சுர நாதத்துடன் 'லய வின்யாஸ'த்தின் சிறப்பை மாத்திரம் வெளிக்காட்டி, கச்சேரி சங்கீதத்தைப் போஷித்து, ரஞ்சகத்தைப் பெருக்குவதே பக்கவாத்யத்தின் நோக்கம் என்பது உண்மையானால்—அது அழகு நம்பியா பிள்ளையின் மிருதங்கமென்றே சொல்லவேண்டும்.

குப்பையில் விளைந்த குருக்கத்திகள்

சொல்லப்போவது புதிய விஷயமல்ல, பழைய விஷயமே. ஆனால் நிரூபிப்பதற்குப் புதிய உதாரணங்கள் இங்கு தரப்படுகின்றன. 'சிப்பியிலே நல்ல முத்து விளைந்திடும் செய்தியறியாயோ? குப்பையிலே மலர் கொஞ்சும் குருக் கத்திக் கொடி வளராதோ?' என்றார் நமது கவி. அதே போல, தரித்திர தேவி தாண்டவமாடும் வீட்டில் பிறந்த குழந்தைகள், மேன்மையான எண்ணங்கள் ஏற்படுவதற்கு, சுற்றியுள்ள நிலைமைகள் சரியாயில்லாத பாலர்கள் சிறு வயதில் ஒழுங்காகப் பள்ளிக்கூடம் சென்று கல்வி கற்பதற்கும் வழியற்றிருந்த சிறுவர்கள், பிற்காலத்தில் சுய அறிவு காரணமாகப் பெரிய ஞானிகளாவதும் உண்டு.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு இன்று பிரதம மந்திரியாக விளங்குகின்ற ராம்சே மாக்டனால்டு ஒரு செம்படவனுக்குப் பிறந்தவர். பாலப் பருவத்தில் தூண்டில்கூடச் சரியாகப் போடத் தெரியாத காரணமாகக் குடும்பத்தில் மூத்தவர்கள் அவரைக் கண்டித்ததுண்டு. ஆனால் இப்போதோ ராஜீயக் கடலில் தூண்டிலுமின்றிப் பலன் வருவித்துக் கொள்ளும் மகா கெட்டிக்காரரென மாக்டனால்டுக்குப் பெயர் கிடைத்திருக்கிறது.

ருஷியாவில் இன்று மகா சக்திமானாக இருப்பவர் ஸ்டாலின் என்பார். ஐந்து வருஷத் திட்டம் என்ற தேச நிர்மாணவேலையைக் கம்பீரமாக நிறைவேற்றிவரும் அவர், சிறு வயதில் பூட்ஸு தைத்துக் கொண்டிருந்தவர். சக்கிலியின் பிள்ளையாகப் பிறந்தவன் வேறென்ன செய்வது? ஆனால் சக்கிலியென்ற காரணத்திற்காக அவரைத் தாழ்த்தப்பட்ட மக்களில் ஒருவராக ருஷியர் ஒதுக்கி வைக்கவில்லை என்பதை இந்தியராகிய நாம் மறப்பதற்கில்லை.

கடிகார ரிப்பேர் செய்து ஜீவித்து வந்தவரின் குமாரர்தான் ரூஸோ என்பவர். இளம் வயதில் அவர் ஒரு தட்டானிடம் தொழில் கற்றுக் கொண்டார். "சம்பளமோ பூஜ்யம். ஆனால் உத்தரவுகளுக்கும் வேலைக்குமோ குறைவில்லை" என்ற அந்த நிலையை உதறிவிட்டு ரூஸோ ஓடிவிட்டார். பிறகு வீட்டு வேலைக்காரனாகச் சில இடங்களில் வேலை செய்து ஜீவித்து வந்தார். 'வாரன்ஸ் அம்மை' என்ற மாது இந்த இளைஞனை உருப்படியாக்குவதென நினைத்து அவன் படிப்பதற்கு ஏற்பாடு செய்தாள். திடீரென்று அந்த மாது எங்கேயோ போய்விடவே ரூஸோவின் நிலை கஷ்டமாகி விட்டது. ஒரு பள்ளிக்கூடத்தில் சங்கீத வாத்தியாராகப் போய் அமர்ந்தார். ஆனால் என்ன சொல்லிக் கொடுத்தாரென்பது தமக்கே தெரியாதென்று அவரே எழுதுகிறார். ஆனால் திடீரென்று ஒரு நாள் அவரை மகா அறிவாளி யென ஐரோப்பா முழுதும் புகழ்ந்தது. வியாசப்போட்டி யொன்றில் அவருக்கு முதல் பரிசு கிடைத்ததே அதற்குக் காரணம். அன்றிருந்து அவர் எழுதத் தொடங்கிய கதைகளும், ஞான போதனைகளும் இலக்கிய உலகத்துக்கே ஆச்சரிய மூட்டுவதாய் உள.

அர்த்த சாஸ்திர நிபுணனெனப் போற்றப்பட்ட மாக்ஸிம் கார்கி இளைஞனாயிருந்தபோது சாராயக் கடை வைத்து ஜீவித்தவன். பிறகு கப்பலில் சமையற்காரனாக வேலை பார்த்தவன். கொஞ்ச நாள் தோட்டக்காரனாகவுமிருந்ததுண்டு. ரொட்டிக் கிடங்கில் வேலை பார்த்தபோது வயிற்றுக்குக் கூடப் போதிய உணவு கிடைக்காமல் அவதிப்பட்டானாம். ஆனால் அந்த நிலையிலேயே அவன் புத்தகங்களைப் படித்துக்கொண்டும், புனைபெயரின்கீழ்ப் பத்திரிகைகளுக்கு எழுதிக் கொண்டும் இருந்தான். பிறகு அவனது அறிவை உலகம் மெச்சும் நிலையை எட்டி விட்டான்.

—ஆசாரிய ராய்.

Have your Majestic figures at
R. DASEN'S ELECTRIC PHOTO STUDIO.
"The Best" and most up-to-date staff and finish.
Artists & Bromide Enlargers & Oil Painters.
55, Rattan Bazaar Road,
G. T., MADRAS.

தேவை

நெல் மெஷினுக்கு குமாஸ்தா தேவை. விவசாயம் தெரிந்தவரா யிருக்கவேண்டும். செங்கல்பட்டு தாலூகாவில் வாசம்செய்ய தனிவிடுதி. செக்யூரிடி 100/- மாதச் சம்பளம் 15/-

மானேஜர்
13. மார்ஷல்ஸ் ரோட், எழும்பூர், சென்னை.



—*Courtesy*: "Buy Indian.

பொது உடைமைக்கு மார்க்கம்

(சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்)

தனி மனிதர்களுக்குச் சொத்துரிமை உண்டு என்ற தத்துவத்தை அஸ்திவாரமாகக் கொண்டே, தற்போதைய ஜனசமூக வாழ்க்கை அமைந்திருக்கிறது. தனி மனிதர் சொத்துரிமை எண்ணம் நமது நாடி நரம்புகளில் ஊறிப்போயிருக்கிறது. இந்த எண்ணத்தை வேரோடு கல்லி யெறியவேண்டும். அது மிகவும் சங்கடமான வேலைதான்; ரணசிகிச்சை 'ஆபரேஷ'னை விட, அதிக வருத்தமான வேலை. இந்த ஆபரேஷனை நோவெடுக்காமல் செய்து முடிப்ப தெப்படி? தற்போதைய நிலைமைகளை மாற்றி, புதிய நிலைமைகளை உண்டாக்குவது எவ்வாறு?

பொது உடைமை இலட்சியங்களை அடைவதற்காக, ருஷ்யாவிலே பலாத்காரத்தை உபயோகித்தார்கள்; அது ஒரு வழி. அவ்வாறின்றி, சமாதான முறையில் பிரசாரம் புரிந்து கொஞ்சம் கொஞ்சமாக மாறுதல்களைச் செய்து வரலாம்; இது இன்னொர் வழி. இங்கிலாந்திலுள்ள பொது உடைமைக் கட்சியினருக்குப் பலாத்காரத்தில் விருப்பமில்லை. ருஷ்யப் பொது உடைமைக் கட்சியினரோ பலாத்காரத்தை விரும்பினார்கள். ஆனால் பலாத்காரம் என்பது பொது உடைமைத் தத்துவத்தில் ஒரு முக்கிய அம்சமல்ல. தனி மனிதர்களுக்குச் சொத்துரிமை இருப்பதை ம்ாற்றிப் பொது உடைமையை ஸ்தாபிப்பதற்காக, அரசாங்க யந்திரத்தை நாம் கைப்பற்ற வேண்டியது அவசியமாயிருக்கலாம். ஆனால், அப்படி அரசாங்க அமைப்பை, பலாத்காரத்தை உபயோகித்தும் கைப்பற்றலாம்; சமாதான முறைகளாலும் கைப்பற்ற முடியும்.

ஜனங்களில் மிகப் பெரும்பான்மையானவர் நம் கட்சியிலிருப்பார்களானால் நாம் பலாத்காரத்தை உபயோகிக்க வேண்டிய அவசியம் நேராது. வலிமை படைத்தவர்களாகவும், சிறு பான்மையோராகவும் இருப்பவர்கள்தான் பலாத்காரத்தில் பிரவேசிக்கிறார்கள். ஆனால், பொது உடைமை ஸ்தாபிதமாவதற்கு மிக அவசியமான அம்சம் என்ன? தொழிலையும் செல்வத்தையும் மனிதர் யாவரும் சமதர்ம ரீதியில் பங்கிட்டுக் கொள்ளவேண்டும், அதற்கு அனுகுணமான நிலைமை உண்டாக வேண்டும் என்ற ஆசை ஜனங்களுக்கு ஏற்படுவதுதான் அவசியமாகும்.

தனி மனிதருக்குச் சொத்துரிமை இருக்கவேண்டும் என்ற எண்ணம் ஓர் மூட நம்பிக்கையாக வளர்ந்திருக்கிறது. பணக்காரன்தான் அப்படி நம்புகிறான் என்பதில்லை; பணக்காரனுடைய சொத்துத்தான் தனக்குச்சோறு போடுவதாக ஏழையும் நம்பிக்கொண்டிருக்கிறான்; ஆகையால், தான் ஜீவிக்க வேண்டுமென்றால், தான் பணக்காரனை ஆதரிக்கவேண்டியது அவசியமென்றும் நினைக்கிறான். இந்த மூட நம்பிக்கையை அகற்றுவதற்காக, பொது உடைமை வாதி இடைவிடாமல் சரியான முறையில் பிரசாரம் செய்ய வேண்டும். அந்தப் பிரசாரம் சத்தியத்தையும், ஸயின்ஸையும் ஆதாரமாகக் கொண்டதாயிருக்கவேண்டும். தரையில் வாழும் மிருகம்—மனிதனைத்தான் எடுத்துக் கொள்வோமே—தண்ணீரில் வாழும் மீனின் ஜீவியம் எப்படி நடக்கிறது என்று விளங்கிக் கொள்ளுவது கஷ்டமேயல்லவா? பொது உடைமை விஷயத்தை மனிதன் அறிந்துகொள்ளுவதும் இதே மாதிரிதான் கஷ்டமாயிருக்கிறது. ஸ்நானம் செய்வதற்கோ, நீச்சல் போட்டிக்காகவோ, தான் தண்ணீரில் இறங்கலாமென்று நினைக்கிறான் மனிதன்; ஆனால், மறுபடியும் தான் தரைக்கு வந்தேயாக வேண்டுமென்று நினைக்கிறான். ஆனால், மனிதன் மீனாகவே மாறிவிட்டால், தரையில் இப்பொழுது எப்படி வசிக்கிறானோ அப்படியே தண்ணீரிலும் சௌக்கியமாக வாழ ஆரம்பித்து விடுவான்.

சொத்து விஷயத்தில் மகாத்மா காந்திக்கும் பொது உடைமை வாதியைப் போலவேதான் அபிப்பிராயங்கள். ஆனால் பொது உடைமையை ஸ்தாபிப்பதற்குப் பலாத்காரத்தை உபயோகிப்பதை அவர் வெறுக்கிறார்.

ஜாதி ஏற்பாட்டைப் பிடிக்காத எனது நண்பர்களுக்கு நான் ஒரு எச்சரிக்கை செய்கிறேன். பொது உடைமை ராஜ்யத்தில், ஜாதி ஏற்பாடு புதிய விதமாய்த் தோன்றிவிடுவதை அவர்கள் காண்பார்கள். நான் ஒரு உதாரணம் தருகிறேன். பொது உடைமை ராஜ்யத்தில் நமக்கு பைஸிக்கிள் வேண்டியிருக்கிறது என்று வைத்துக்கொள்ளலாம். ஒரு கூட்டத்தார் அவற்றைச் செய்வார்கள். இயற்கையாகவே அதில் அவர்களுக்கு ஓர் விசேஷத் திறமை ஏற்பட்டுவிடும். ஆகையால், நினைத்தவரெல்லாம் ஸைக்கிள் தொழிற்சாலை திறக்கச் சாத்தியப்படாது. என்னிடம் நிறையச் செல்வம் இருந்து நான் ஒரு தொழிற்சாலையை வாங்க முயன்றாலும் கூட, அரசாங்கம் அதற்கு இடங் கொடுக்காது. துரைத்தனத்தின் அதிகாரப் பத்திரம் பெற்றவரே ஸைக்கிள் செய்வார்கள். அவர்கள் ஒரு தனிக் கோஷ்டியினராகி, தங்களுக்கென ஒரு தொழிற் சங்கமும் ஸ்தாபித்துக் கொள்ளுவார்கள். இதனால், ஒரு பைஸிக்கிள் ஜாதி ஏற்பட்டுவிடும்; ஆனால்,

பைவிக்கில் ஜாதி என்ற பெயர் இருக்காது. இதே மாதிரியே தொடர்ச்சியாக ஒவ்வொரு வேலையைச் செய்வோரெல்லாம் அந்தந்த ஜாதியினர்போல் கூட்டுச் சேர்ந்துவிடுவார்கள்.

நாம் நூறு வருஷங்கள் கழித்து மறுபடியும் பூலோகத்தில் வந்து ஜனிப்போமானல், நமது வெறுப்புக்குப் பெரிதும் பாத்திரமாகிவிட்ட பழைய ஜாதிப் பேய் மறுபடியும் நிலவக் காண்போம். ஆனல், அதன் பழைய கோரப் பற்கள் பிடுங்கப்பட்டிருக்கும்; அதோடு, தங்கமான குணத்தையும் அது பெற்றிருக்கும். சமூகத்தில் உயர்வு தாழ்வு வேற்றுமைகள் இருக்க மாட்டா. ஏனென்றுல் மனிதர் யாவரும் ராஜாங்கத்தின் ஊழியரா யிருப்பார்கள்; பதவி, அந்தஸ்து, செல்வாக்கு இவற்றில் வேற்றுமைகளைச் சிருஷ்டித்துக்கொண் டிருக்கும் தனி மனிதர் சொத்துரிமை வழக்கம் மாய்ந்து போயிருக்கும். ஒரு பைவிக்கிள் தொழிலாளி தனது வேலையைச் சரிவரச் செய்யாவிட்டாலும் சோம்பேறியாயிருந்தாலும், பைவிகிள் தொழிலாளர் சங்கம் அவனை 'ஜாதிப் பிரஷ்டம்' செய்துவிடும். துரைத்தனம் அவனது 'அப்பீலு'க்குச் செவி சாய்க்காது. ஒரு விவசாயியாகத் தொழில் புரியலாமென்றுலோ, அவனுக்கு அதற்கேற்ற பயிற்சி கிடையாது. அவனுக்குச் சொத்தும் இல்லை; எங்கேயாவது போய்க் கொஞ்சம் நிலம் வாங்கி, சோம்பேறி நிலச்சுவான்தாராய்க் காலம் கழிக்கவும் இயலாது. இப்பொழுது ராஜாங்கக் காரியாலயத்தி லிருக்கும் ஒரு குமாஸ்தாவை வேலையைவிட்டுத் தள்ளினல் அவர் கதி என்னவாகிறது? பெரும் கஷ்டப்படுகிறு ரல்லவா? இவரைவிட அதிகக் கஷ்டப்படுவான் அந்த பைவிகிள் தொழிலாளி. பொது உடைமை ராஜ்யத்தில் ஒவ்வொரு தனி மனிதனும் பொறுப்பாய் வேலை செய்ய வேண்டுமென்ற எண்ணம் கொள்ளுவான்; பொது நன்மையையே மனத்துட்கொள்ளுவான். 'ஜாதிப்பிரஷ்டம்' செய்யப்பட்ட மனிதனே பரம சங்கட நிலைமையை அடைவான்.

உலகத்தில் கிடைக்கும் பொருள்கள் மனிதனுடைய சகல தேவைகளுக்கும் போதியவை; அந்தப் பொருள்களைச் சமதர்மரீதியில் பங்கிட்டுக்கொள்ளாததால்தான் மனிதர்கள் துன்பமடைகிறுர்கள். இதுதான் பொது உடைமைத் திட்டத்தின் அஸ்திவாரமான தத்துவம். பொது உடைமைத் தத்துவம், ஈசுவரனின் கருணையில் நம்பிக்கை கொண்டது; உலகம் வேண்டியதைக் கொடுக்கும் காமதேனு என்ற நிச்சயம் உடையது. உலகத்தில் கிடைக்கும் பொருள்கள் உலகத்திலுள்ள சகல ஜனங்களுக்கும் போதுமா போதாதா என்று நாம் பரிட்சித்துத்தான் பார்ப்போமே? பொது உடைமை கூடாது, தனி மனிதர்களுக்குச் சொத்துரிமை இருக்கத்தான் வேண்டும் என்று சொல்லுபவன் கடவுளிடமே நம்பிக்கை இல்லாதவன்; பூமிதேவி வேண்டிய பொருளெல்லாம் தருவாள் என்ற நிச்சயமில்லாதவன். எல்லாரும் சுகமாய் வாழ்வதற்கு இந்த உலகம் போதாது என்றும் சிலரே சந்தோஷமாய் வாழ முடியும் என்றும் நினைப்பவன் அவன். அதுதான் நாஸ்திகம்.

தனது ஐந்து குழந்தைகளை அருகே யழைத்து, "நான் வைத்திருக்கும் சொத்து உங்கள் ஐவருக்கும் போதுமானது" என்று ஒரு தந்தை கூறுகிறுன். பிள்ளைகள் சொல்லும் பதில் என்ன? "இல்லை; அது போதாது. எங்களில் சிலர்தான் சந்தோஷமா யிருக்க முடியும்; மற்றவர் துன்பப்பட வேண்டியதுதான். எங்களில் மூத்தவனே அந்தச் சொத்தை அடையவேண்டும்." இவ்வாறு பிள்ளைகள் சொன்னுல், அது நியாயமா யிருக்குமா? உலக முழுவதும் ஒரே அவிபக்த குடும்பமாய் வாழவேண்டு மென்பதுதான் பொது உடைமைத் திட்டம். ஆனல் பொது உடைமையை ஸ்தாபிப்பதற்கு நாம் பலாத்காரத்தைக் கைக் கொள்ளாமலே உழைப்போமாக! மனிதனின் ஆஸ்திகளுக்குள்ளெல்லாம் மிக மதிப்பரியது அன்பெனும் அருங்குணமாகும். ஆதலால், நமது வாழ்வின் ஒவ்வொரு விநாடியும் அந்த அருங்குணத்தை வளர்ப்பதிலேயே ஈடுபடுவோமாக!

[இது Chats Behind Bars என்ற ஆங்கிலப் புத்தகத்தினின்றும் எடுக்கப்பட்டது.]

வெளியாய் விட்டது ! வெளியாய் விட்டது !!

ஸங்கீத ரஸிகர்களுக்கு இன்றியமையாதது

இதுவரை யில்லாததோர் நூதனப் புஸ்தகம்

பெரியோர்களாலும், பத்திரிகைகளாலும் புகழப்பட்டிருக்கிறது.

'Personalities in Present Day Music'

'தற்கால ஸங்கீத வித்வான்கள்'

சென்னை இ. கிருஷ்ணய்யரால் எழுதப்பட்டது.

வாய்ப்பாட்டு, காலக்ஷேபம், வீணை, புல்லாங்குழல், பிடில், மிருதங்கம், நாதஸ்வரம், பரத நாட்டியம் இவைகளில் தற்காலம் பிரபலமடைந்திருக்கும் வித்வான்களுடைய ஜீவிய சரித்திரக் குறிப்புகளும், கலையழகு விமரிசனமும் அடங்கியது.

ஆங்கிலத்தில் அழகுடன் எளிய நடையில் வெகு ருசிகரமாய் எழுதப்பட் டிருக்கிறது.

15 சித்திரப்படங்களும் கொண்டது.

விலை ரூபாய் 1 தான். தபால் சார்ஜ் வேறு.

கிடைக்குமிடம் ;—ஆசிரியர் விலாஸம் No. 3, கொண்டி செட்டித் தெரு, ஜி. டி. மதருஸ்.

வேண்டுவோர் சீக்கிரம் எழுதவேண்டும்.

‘அசட்டுச் சிரிப்பைவிட’

(“மாயா” எழுதியது)

எங்கள் வீட்டுப் பூனைக்குட்டிமேல் எனக்கு மாத்திரமல்ல, எங்கள் பாட்டி, வேலைக்காரன், வேலைக்காரி, குஞ்சு, அம்மு எல்லோருக்குமே ரொம்ப அன்பு. இதில் ஒன்றும் அதிசயமில்லை, வாசக நண்பரே! (‘வாசக சுவாமீ’ என்று கூப்பிடவில்லையென்று தங்களுக்கு வருத்தமில்லையே) தாங்கள் ஒரு நாள் இந்தப் பக்கம் வந்தால், சிரமத்தைப் பார்க்காமல் நம்ம வீட்டு வரைக்கும் வேண்டுமானால் வந்து, பாருங்கள். நேரில் பார்த்தால் எவ்வளவு அருமையான பூனைக்குட்டி என்பது உங்களுக்குத் தெரியவரும். ஆனால், சீக்கிரம் வரவேண்டும். ஏனெனில், பூனைக்குட்டிக்குச் சாட்சாத் சிவபெருமானிடமிருந்து அழைப்பு வந்திருக்கிறதுபோல் தெரிகிறது. கைலாசத்திற்குப் போய்விட்டால், அங்கு இடமில்லையென்று தள்ளிவிட்டார்களானால்கூட, பூலோகத்துக்குத் திரும்பவும் வருவது சாத்தியமில்லை யல்லவா?

ஆனாலும், என் வார்த்தையில் தங்களுக்குப் பூரண நம்பிக்கை உண்டென்பதை நான் அறிவேன். ஏனெனில், நான் அச்சு வாகனத்தின் உதவியைக் கொண்டல்லவா பேசுகிறேன். வாஸ்தவமாகவே, எங்கள் பூனைக்குட்டி ரொம்ப அருமையானது. நீங்கள் அப்பொழுது அல்லவா பார்க்கவேண்டும். அம்மு அத்தை வீட்டுக்குப் போயிருந்தாள். வரும்போது, பத்து வருஷத்துக்குப்பின் தனக்குப் பிறக்கப் போகும் செல்லக் குழந்தையைத் தூக்கி வைத்துக்கொள்ளப் போவது போலவே செல்லமாய் இதை இடுப்பில் வைத்துக்கொண்டு அவள் போட்ட ஒய்யார நடை இன்னும் என் கண்முன் நிற்கிறது. அந்தப் பூனைக்குட்டிதான் என்ன! “மியா, மியா” என்று அது கத்தியவுடனே, “ஓஹோஹோ! நாம் படித்த அதே இரண்டாம் வாசகப் புத்தகத்தை இதுகூடப் படித்திருக்கிறது” என்று தோன்றிற்று. அவ்வளவு நாசூக்காய்க் கத்தியது. என்ன சமர்த்து! என்ன சமர்த்து!!

இப்பவும்தான் என்ன? சமர்த்துக்குக் குறைவே கிடையாது. அதோடுகூட, மனிதர்களுடைய பழக்க வழக்கங்களைப் பெற்று, குணத்திலும் ரொம்ப வளர்ச்சியடைந்து வந்திருக்கிறது. நீட்டி முழக்கிக்கொண்டு பேசுவானேன். சுத்த சைவமாய் மாறிவிட்டது, சுவாமீ! ஊஹூம்! ‘கம்பிளீட்’டாக, மாமிச பட்சணத்தைத் தொடவே மாட்டேனென்கிறது. உயிரோடிருக்கும் எலியைக் கொண்டு வந்து போடுங்கள். சகோதர பாவத்தோடு வாலை முடக்கிக் கொண்டு பேசாமல் படுத்திருக்கிறதே யொழிய, கொஞ்சம்கூட மிருகம்போல் நடந்து கொள்ளுவதில்லை. நமது பெரியவாள்கூட “புலியும் பசுவும் ஒரு துறையில் தண்ணீர் குடிக்கவும்” என்று செங்கோலரசாட்சிகளைப்பற்றி வர்ணித்திருக்கவில்லையா? எங்கள் வீட்டில்கூட நானோ, அம்முவோ, குஞ்சுவோ, அல்லது எங்கள் பாட்டிதானோ செங்கோல் அரசாட்சி நடத்தத் தகுந்தவராயிருக்கவேண்டுமென்ற ஒரு நிச்சயமும், ஆனால் அது யார் என்பதைப் பற்றி நிர்ணயிப்பதில் ஒரு விவகாரமும் ஏற்பட்டிருக்கின்றன. யாருடைய பழக்கத்தால் பூனைக்குட்டி இப்படி சுத்த சகோதரத்துவத்தைக் கற்றுக் கொண்டிருக்கிறது என்ற விஷயம் இன்னும் முடிவாகவில்லை.

ஆனால், இந்தப் பூனைக்குட்டி—இதற்கு லில்லி, எச்சுமி, மங்களம் என்று பல பேருண்டு—சமர்த்திலும், ஒழுக்கத்திலும், ‘நாளொரு, மேனியும் பொழுதொருவண்ண’முமாய் வளர்ந்து வந்தாலும், அதன் இலௌகிக மேனியும் வண்ணமும் மெலினமடைந்து வருகின்றன. அதாவது அதன் உடல் நிலை சில நாட்களாக அவ்வளவு சரியாயில்லை. “என்ன இப்படித் திடீரென்று சொல்லுகிறீரே. ஏதாவது புல்லடின் கில்லடின் வெளியிட்டு வந்திருக்கப் படாதா” என்று கேட்கிறீர்கள் அல்லவா? அது எங்கள் குறையல்ல. நமது பிரபல தினசரிகளின் சங்கதிதான் உங்களுக்குத் தெரியுமே. யாராவது அடக்க ஒடுக்கமாக இருந்தால், அதுவும் நமது மாகாணத்தைச் சேர்ந்தவனாயிருந்தால், விளம்பரம் தருவதேயில்லையல்லவா? இந்த எளிய பூனைக்குட்டியின் ‘புல்லடின்’களை அவை ஒரேயடியாய் அமுக்கிவிட்டன அல்லது அமுக்கியிருக்க வேண்டும் என்பதை நான் சொல்லவா வேண்டும்.

நமது பூனைக்குட்டி எச்சுமி இப்பொழுது ஒரே சிரிப்பாய்ச் சிரிக்கிறாள். அவளுக்கு ஹாஸ்யரஸம் ரொம்ப ஜாஸ்தியாகப் போய்விட்டது. குணம் வளர வளர நகைச் சுவையும் தினேதினே விருத்தியடைந்து வரும் என்பதற்கு எங்கள் செல்ல எச்சுமிக் குட்டியைவிட, வேறு உதாரணமே வேண்டியதில்லை. பாலைக் கொண்டுவந்து வையுங்கள்; பல்லைக் காட்டுகிறாள். வெண்ணையை முன்னே இடுங்கள்; அப்பொழுதும் அவளுடைய அழகான முத்துப்போன்ற பல் வரிசை—முப்பத்திரண்டா இருபத்திரண்டா என்ற எண்ணிக்கை நடந்துகொண்டிருக்கிறது; முடிந்ததும் அறிவிக்கிறேன். எப்போதும் சந்தடியற்ற புன்னகைச் சுழல் அவள் முகத்தில் வட்டமிட்டுக் கொண்டேயிருக்கிறது. இப்படி அபாரமாய் அவளுக்கு நகைச் சுவை வளர்ந்ததற்கு என்ன காரணம் என்பது தெரியவேயில்லை. விகடப் பத்திரிகைகளின் பரிச்சயம் ஏற்பட்டிருக்குமோ என்பதற்கு இடமேயில்லை. ஏனென்றால், படுத்த படுக்கையைவிட்டு அவள் வெளியே போவதே கிடையாதே.

“எச்சுமிக்கும் இப்பிடி வரலாமோ!” என்று பாட்டி கதறுகிறாள். “லில்லி! லில்லி! கொஞ்சம் வாய்திறந்து மியா என்று கத்தேன்” என்று குஞ்சு கெஞ்சுகிறாள். “கொஞ்சம் பாலைக் குடியம்மா, மங்களம்” என்று அம்மா இரங்குகிறாள். இத்தனையையும் கேட்டுக் கொண்டு, இந்த வேதாந்தப் பூனைக்குட்டி பல்லைப் பல்லைக் காட்டுகிறதே யல்லாமல், தனது முடக்கத்தை விட்டுக் கிளப்பமாட்டேனென்கிறது.

இப்பேர்ப்பட்ட சமயத்தில் யாருக்குத்தான் அலுப்பும் தூக்கமும் வராது? நான் தூங்கியேபோனேன். அப்புறம் என்ன நடந்திருக்க வேண்டுமென்பதை யூகியுங்கள் பார்க்கலாம். கிரமப்படி கனவுகாண வேண்டாமா? ஆம், பெரிய பெரிய ஆசிரியர்களைப் போலவே

கனவும் கண்டேன். நமது வைத்திய சாஸ்திரத்துக்கே ஆதி புருஷர்களில் ஒருவரான தன்வந்திரி பகவான் பிரத்யட்சமானார். 'கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது' என்று எண்ணி, விழுந்து விழுந்து நமஸ்கரித்தேன். பிரச்னோத்தரங்கள் நடந்தன.

"சுவாமீ! தீனதயாளுவான தாங்கள் தான் சொல்லவேண்டும். பூனைக்குட்டிக்கு என்ன வந்திருக்கிறது? வேதாந்தமாயிருக்கிறது; ரொம்ப ரொம்பச் சிரிக்கிறதே. சிரிப்பே பரமௌஷதம் என்பார்களே. இப்படியெல்லா மிருந்தும் உடம்பு மெலிவானேன்?" என்றேன்.

பகவான் வழக்கப்படியே புன் முறுவல் பூத்தார். வெகு சுருக்கமான பதில்.

"அப்பா! முதலில் தீர்க்காயுஷ்மான் பவ: பிறகு—நீ சொன்னதெல்லாம் வாஸ்தவம். பூனைக்குட்டிக்கு வேதாந்தம் விளங்கி வருகிறது உண்மையே. சிரிப்பும் ஏராளமாகிவிட்டது. ஆனால் எப்பொழுதும் எதற்கும் சிரிக்கப் படாது. பாலுக்கு முன்னே சிரித்தோடினால், பட்டினிதான். எலிக்கு முன்னே சிரித்து முடங்கினால் சத்துரு வளர்ச்சி. அசட்டுச் சிரிப்பைவிட அழகான பிலாக்கணமே ரொம்ப மேல்" என்றார்.

விழித்துக்கொண்டேன். பகவான் சொன்னதன் அர்த்தம் புரியவில்லை. தங்களுக்குத் தெரிந்தால் எழுதியனுப்புங்களேன். எப்படியாவது எங்கள் எச்சுமியின் கைலாசப் பிரயாணம் தடைபட்டு நின்றால் சரிதான்.

ரஹீம் கவிதை மாலை

(திப்பு எழுதியது)

[அக்பரின் ஸமஸ்தானத்தில் ரஹீம் என்ற மந்திரியொருவர் இருந்தார். ஜாதி மதபேதமின்றி அநேக ஹிந்து நூல்களைப் படித்து ஆழம் அறிந்த பெரியார்களில் அவரும் ஒருவர். பக்கிரியாக அலைந்த காலத்தில் அவர் இயற்றியுள்ள அநேகம் பாக்கள் இன்னும் இந்துஸ்தானி பாஷையை அலங்கரிக்கின்றன. தமிழரும் அவைகளை நுகருவதற்காக, இங்கு சிலவற்றைத் தருகிறேன்.]

1. ஓர் விளக்கு இருந்தாலே எங்கும் ஒளியுண்டு; கண்களெனும் இரண்டு விளக்குகளிருக்க உடலுள் உறையும் அன்பு எவ்வாறு மறையும்?

2. கருவேல மரமும் வாழை மரமும் எப்படி ஒன்றாயிருக்க முடியும்? முன்னவர் ஆனந்தமாக ஆடிக்கொண்டிருந்தால், பின்னவரின் அங்கம் ஒவ்வொன்றாகக் கிழியும்.

3. அந்த மகா கங்கையும் சமுத்திரத்தை யடைந்து தன் பெயரை இழந்தாள். பிறரிடம் சென்று யார்தான் பெயரை இழக்கவில்லை?

4. சிறுவர் செய்த பிழையைப் பெரியோர் பொறுப்பது கடன். பிருகு உதைத்ததால் விஷ்ணுவுக்கு என்ன குறைந்துவிட்டது!

5. சிறியோர் உதவி யில்லாமல் பெரியோர் புகழை யடையமுடியாது. ஆயிரம் ரூபாய் விலையுள்ள குதிரை காலணா விலையுள்ள முளையில் கட்டப்படுவ தில்லையா?

6. தெரிந்தும் பிழை செய்வோனையும் விழித்துக்கொண்டே உறங்குபவனையும் அறிவிப்பதும் எழுப்புவதும் தகாது.

7. மீன் வலையிலகப்பட்டவுடன் ஜலத்திற்கு அதனிடம் அன்பு நீங்கி விடுகிறது; ஓடிவிடுகிறது. ஆனால் அப்போதும் ஜலத்தின்மீதுள்ள அன்பை மீன் விட்டுவிட வில்லை.

8. தீபம் அணையாதிருப்பதற்காக முந்தாணியில் மறைக்கிறோம். மிகவும் நெருங்கி விட்டாலோ தீபம் துணியை எரித்து விடுகிறது. ஸமயம் கெட்டுவிட்டால் நண்பரும் சத்துருக்களாகி விடுவர்.

9. ஸத்புருஷர்கள் காம்ய போகத்தைத் துறப்பார்கள்; ஆனால் அதே போகங்களை மூடர் விரும்புவர். மனிதர் எடுத்த வாந்தியை நாய் விரும்புவது இயற்கை யன்றோ!

10. இயற்கை சிறந்ததானால் சஹவாஸம் என்ன செய்யும்? எவ்வளவு பாம்புகள் சூழ்ந்திருந்தாலும் சந்தனத்தில் விஷம் ஏறுகின்றதா?

11. மனது கைவச மிருந்தால் எண்ணம் எங்கு சென்றாலென்ன? நிழல் ஜலத்தில் விழுந்தால் உடல் நனையுமா?

12. நல்லவரோடு ஏற்பட்டுள்ள நட்புக் கட்டு எவ்வளவு தடவை அறுந்துவிடினும் உடனே கட்டிக்கொள்ள வேண்டும். முத்து மாலை எவ்வளவு தடவை அறுந்து போயினும் திரும்பித் திருப்பி முடிந்து கொள்ளவில்லையா?

13. கெட்ட காலம் ஏற்பட்டால் தகாத இடங்களை யெல்லாம் அடைய வேண்டியிருக்கின்றது. வீடு நெருப்புப் பற்றி எரியும்போது குப்பை மேட்டின்மீது ஏறி நிற்ப தில்லையா?

14. கண்ணின் அழகு, உதட்டின் சுவை—இவற்றில் எது தாழ்ந்தது? லவணத்திற்குப் பின் மதுரமும் மதுரத்திற்குப் பின் லவணமும் வேண்டியது தானே.

15. கல் ஜலத்தில் ஆழ்ந்துவிடுமே யன்றிக் கரைந்து விடாது. அதுபோல் மூடர்கள் ஞானத்தைப் படித்தாலும் உள் மர்மத்தை அறியார்.

16. பெரிய வயிறு படைத்தவர்கள் பாடு கஷ்டம் தான். ஆசையாலன்றோ அந்த யானை பற்களை யிளித்து இளித்துக் கடைசியில் இரண்டு பற்கள் வெளியே வந்துவிட்டன!

17. கடைவதினால் வெண்ணெய் தயிரை விட்டுப் பிரிந்து விடுகின்றது. எப்பேர்ப் பட்ட குழப்பத்திற்கும் விட்டுக் கொடுக்காதவன் தான் உண்மையுள்ள நண்பன்.

18. கௌரவமாக விஷத்தையுண்ட சிவன் ஜகதீசனானார். திருடிய அமுதத்தையுண்டு ராகு தலையிழந்து அலைகின்றான்.

19. பிறருக்கு மருதாணி பூசும் கைக்கு, தானே சிவப்பு ஏறுகிறது. பிறருக்கு உபகாரம் செய்வோருக்கு நன்மை சுயமாகவே ஏற்படும்.

20. ஓரிடத்தில் இரப்பதற்குச் சென்றோர் இறந்தவ ரொப்பர்; இரப்பவருக்கு இல்லை யென்பவர் அதற்கு முன் இறந்தவ ராவர்.

21. ஸூர்யன் கண் திறந்தவுடன் குளிரும் இருளும் அகல்கின்றன. அதை ஆந்தை பார்க்காவிடில் கதிரவனின் பெருமை குறைந்து விடுமா?

22. இயற்கையையும் விட்டுக் கொடுத்து இரண்டறக் கலக்கும் நட்பன்றோ சிறந்தது. மஞ்சள் தன்னிறத்தையும், சுண்ணாம்பு தன்னிறத்தையும், ஒன்று பட்ட காலத்தில், இழந்துவிட வில்லையா?



கனவு

("அசுவதி")

ஆண்டாள் ஒரு அதிசயக் கனவு கண்டு கண் விழித்தாள். தோழியிடம்,

"....மதுசூதனன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன்
தோழீ! நான்"

என்று தான் கண்ட கனவைக் கூறினாள். அவள் கனவு பலித்தது. ரங்கநாதனையே மணந்துகொண்டாள். அது அவளதிர்ஷ்டம். ஆனால் கனவு ஏகபோக உரிமைப் பொருளல்ல; பொது உடைமைப் பொருள். ஆண்டாளைப் போன்றே நாம் எல்லோருமே கனவு கண்டுகொண்டுதானிருக்கிறோம். நம்மால் தவிர்க்கமுடியாதது கனவு; நம்மிடையில் கனவு காணாதிருப்பவர் இருப்பது அரிது; ஏன், ஒருவருமே இல்லையெனலாம். ஆனால் ஒன்று. ஆண்டாள் கனவு பலித்தது; நம் கனவு பலிக்கிறதில்லை. அவ்வளவுதான் வித்தியாசம். எப்பொழுது கண்ட கனவுகள் ஒன்றும் பலிக்கவில்லையோ கனவே காணாமலிருந்து விடலாமென்றால், அதுவும் முடியவில்லையே. புதுப்புதுக் கனவுகள் கண்டு கொண்டுதானே யிருக்கிறோம்.

இது போலவே, தவிர்க்கமுடியாத கனவு மற்றொன்றுண்டு. அதுதான் மனக்கனவு. முன் கூறிய கனவைத் தூங்கும்பொழுதுதான் காண்கிறோம், அது கண்ணிற்குத் தோன்றும் தோற்றம். பிந்தியதை விழித்திருக்கும் போதே காண்கிறோம். கண்களாலல்ல; மனதினால். அது மனது கொள்ளும் மயக்கம். உதாரணமாக, நான் ஒரு பட்டதாரி. நூறு ரூபாய் சம்பளத்தில் இரண்டு வேலையாட்கள் சதாக்கைகட்டி நிற்கும்படியான உத்தியோகம் கிடைக்காதா வென்பதே என் மனக்கனவு. இது இந்நாளில் எம்மட்டில் பலிக்கும்? பட்டதாரியின் விலையோ பதினைந்தே சில்லறை ரூபாய் என்று பிரபுல்ல சந்திரர் சொல்கின்றாரே! அப்படிக்கிருக்க உத்தியோகமாவது? 100 ரூபாயாவது?

கனவு காணாதிருப்பது முடியாத காரியம்தான். நம் மஹாத்மாவும், ஜவஹர்லாலும், ஸர் இக்பாலும், பாய் பரமானந்தரும், ஆசாரியாவும், சாரதாவும், சதாக் கனவு கண்டுகொண் டிருக்கும் பொழுது, நம்மால் அதைத் தவிர்க்க முடியுமா? முடியுமென்றால்தான் கேட்போர் நகையார்களா? அதென்ன, அவர்கள் கனவுதான் என்ன, அவை பலிக்குமா வென்று பார்ப்போம்.

மஹாத்மா காணுவது சுதந்திரக் கனவு. அடிமை இந்தியா சுதந்திர இந்தியாவாகத் திகழ வேண்டுமென் பதே அதன் சாராம்சம். உலகெங்கும் சுதந்திர தீபம் ஓங்கிச் சுடர்விட்டொளி வீசுவதை நாம் காண்கின்றோம். அந்த ஜோதி நம் நாட்டிலும் துலங்கவேண்டுமென மகாத்மா காணும் கனவு இன்றல்லாமற் போனாலும், நாளையாவது பலிதமடைவது நிச்சயம்; அசாத்தியமானதன்று. மனிதனுடன் பிறந்தது சுதந்திரம்; இழந்த அதை மீண்டும் பெற விரும்பும் ஆசைக்கனவு பலிதமடையாது போகுமேயாகில், உலகில் பலிக்கக்கூடியது வேறென்னதானிருக்கிறது?

மஹாத்மாவைப் போல, பண்டித ஜவஹர்லாலும் ஒரு கனவுக்காரர். இந்தியாவின் அரசியல் முன்னேற்றத்திற்கு மூலபலம் போன்றது அதன் பொருளாதார நிலைமையின் அபிவிருத்தியே. பொருளாதார நிலைமையின் அபிவிருத்திக்குக் கர்த்தாக்கள் தொழிலாளரும், விவசாயிகளுமே. அவர்களது நிலைமையை உயர்த்துவதை முதன்மையாகக் கருதவேண்டும். ஒருசில முதலாளிகள் கையில் தேங்கிக் கிடக்கும் பணம் யாவருக்கும் பயன்படச் செய்ய வேண்டும்.

"எல்லோரும் சமமென்னும்
காலம் வந்ததே,"

"ஏழையென்றும், அடிமையென்றும்
எவனுமில்லை ஜாதியில்,"

என்று பறை சாற்றும் தினத்தைக் கனவு காண்கிறார் ஜவஹர். இது மகாத்மாவின் கனவோடு பிணைக்கப்பட்டிருக்கிறது. இதனால் அதற்குப் பலம்; அதனால் இதற்குப் பலன். சுதந்திரம் பொருளாதார நிலைமையை அபிவிருத்தி செய்ய ஏதுவா யிருக்கும். பொருளாதார நிலைமையின் அபிவிருத்தியைக் கொண்டு, சுதந்திரம் பெறுவதெளிது. இக்கனவும் பலிக்கக் கூடியதே; அசாத்யமானதன்று. ஆனால் சற்றுத் தாமத மேற்படலாம்.

அடுத்தாற்போல் இக்பாலும், பரமானந்தரும். முன்னவர், எல்லைப்புறம், பஞ்சாப், ஐக்கிய மாகாணம், சிந்து, வங்காளம், இவ்வைந்தையும் சேர்த்து முஸ்லீம் இந்தியாவாக ஆகவேண்டுமென்று கனவு காண்கிறார். பின்னவரோ, பெரும்பான்மையான ஹிந்துக்கள் ஆட்சியே நிலவவும், சிறுபான்மையோருக்குப் பாதுகாப்புகள் மட்டுமே அளிக்கலாமென்றும், அவர்கள் நம்மை அடக்கி ஆள்வதா வென்றும் கனவு காண்கிறார். இவ்விருவரது கனவும், நான் முன்கூறிய பட்டதாரியின் உத்தியோகக் கனவுபோல்தான். தனி முஸ்லீம் ராஜ்யம் ஸ்தாபிதமானால், அங்கிருக்கும் ஹிந்துக்கள் அவர்களது பொருள்கள்—"ஹிந்து இந்தியா"விலிருக்கும் முஸ்லீம்கள்—அவர்களது பொருள்களைப்பற்றி யென்ன ஏற்பாடு செய்வது? இவர்களும் அன்னிய ஆட்சியின் கீழிருக்கச் சம்மதியார்களே. அங்கிருப்பவரை இங்கும், இங்கிருப்ப

வரை அங்கும் மாற்றிக்கொள்வதா? வேடிக்கைதான்! தேசியத்தை அடிப்படையாகக்கொண்டு அரசாங்கங்கள் நடைபெறு மிக்காலத்தில், மதத்தை அடிப்படையாகக் கொண்டு ராஜ்யம் நிறுவ நினைப்பது அறி வுடைமையா? முடிகிற காரியமா? இதே வார்த்தைகள்தான் பரமானந்தருக்கும். எப்பொழுது சிறு பான்மையினர் இந்தியாவில் குடியேறி நிரந்தரமாகத் தங்கிவிட்டார்களோ, அப்பொழுதே இந்தியர்களாகி விட்டனர். அரசாங்கத்தில், உரிய பங்கெடுத்துக்கொள்ள அவர்களுக்கும் உரிமை யுண்டு. பெரும்பான்மையினர் என்ற காரணம் கொண்டு சிறு பான்மையினரை அடக்கியாள நினைப்பதும், அறிவுடைமை யாகாது; முடிகிற காரியமுமில்லை. ஆகவே இவர்கள் கனவு கனவாகவே யிருக்கவேண்டியதுதான். நிச்சயமாய்ப் பலிக்கா தென்னலாம்.

அடுத்தாற்போல் ஆசாரியாவும், சாரதாவும். "ஆதிமுதல் அநுஷ்டிக்கப்பட்டு வருவனவற்றை, இனியு மவ்விதமே அனுஷ்டித்து வரவேண்டும். காலம் எப்படி மாறினும் சாத்திரம் புறக்கணிக்கப் படக்கூடாது. சாத்திரப்படி நடக்கக் கூடிய வர்ணாசிரம ராஜ்யமே வேண்டும்" எனக் கனவு காண்கிறார் எம்.கே. ஆசாரியா. சாரதாவோ, "கால மாறுதலுக்கேற்றவாறு சாத்திரத்தைத் திருத்தவேண்டும். சாத்திரம் நமக்காகவேயன்றி, நாம் அதற்காக வல்ல" எனச் சீர்திருத்தக் கனவு காண்கிறார்.

புராதன வழக்கம் என்னும் மரம் சீர்திருத்தக் காற்றில் பலமாக அலைபட்டுச் சாயும் நிலைமையி லிருக்கையில், சாத்திரக்கிளையைப் பிடித்துக்கொண்டு விடமாட்டேனென்றால், மரம் சாயும் பொழுது, கிளையைப் பிடித்திருப்பவன் கதி யென்னவாகும்? கரைபுரண்டோடும் சீர்திருத்த வெள்ளத்தை அணை போட்டுத் தடுக்கமுடியுமா? ஆகவே ஆசாரியாவின் கனவும் பலிக்கக் கூடியதல்ல. சாரதாவின் சீர்திருத்தக் கனவு நாளடைவிலேதான் நிறைவேறக் கூடியது. இந்தியாவின் நிலைமை அதைத் துரிதப்படுத்துவதற்கு ஏற்றதல்ல. இன்றோ நாளையோ பலித்துவிடுமென உடனே எதிர்பார்க்கக் கூடியதுமன்று.

கனவு காணாதிருக்க முடியாதென முன்பே சொல்லியிருக்கிறேன். கனவு காணாவிடில் முன்னோக்கிச் செல்ல முடியாது; முன்னேற்றமு மில்லை. என் செய்வது?



(திருச்சி, கே.வீ.எஸ். வாஸ்)

பைந்தமிழ்ப் பூஞ்சோலையின் கண் நறுமணம் வீசும் மலர்களுள் ஸ்ரீ ஏ. மாதவையா என்ற புஷ்பம் வாடாப் புகழுடையது. திருநெல்வேலி ஜில்லாவில் பெருங்குள மென்னும் சிறு கிராமத்தில் ஆயிரத்து எண்ணூற்று எழுபத்திரண்டாம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பதினாறாம் தேதி அந்த மலர் அரும்பிய தினம் ஆகும். அந்தத் தினத்தை இன்னும் தமிழன்பர்கள் ஓர் புனித தினமாகக் கொண்டாடக் கடமைப்பட் டிருக்கின்றார்கள்.

தனது இருபதாம் ஆண்டில் ஸால்ட் அசிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர் பதவியில் அமர்ந்து, பின்னர் அசிஸ்டெண்டு கமிஷனர் உத்தியோகத்தையும் வகித்தவர் ஏ. மாதவையா. "அன்பிற்கு முண்டோ அடைக்குந் தாழ்" என்றபடி தான் ஈசுவர சங்கல்பத்தால் உயர் பதவியை யடைந்திருப்பினும் தாழ்ந்த உத்தியோகத்திலுள்ள குமாஸ்தாக்களிடம் அத்தியந்த அன்பும் ஆதரவும் காட்டி வந்தது வியக்கத் தக்கதே. விளையும் பயிர் முளையிலே என்பர் ஆன்றோர். "தனது பிற்காலத்தில் தமிழன்பர்கள் தன்னை என்றும் மறவாதிருக்கும்படியான ஏதோவோர் பெரிய செயலைத் தமிழ்த் தாய்க்குச் செய்யவே நம்மை ஆண்டவன் பிறப்பித் திருக்கிறான்" என்ற எண்ணம்மட்டும் அவருக்குப் பால்யத்திலேயே தோன்றிவிட்டதோர் ஆச்சரிய மல்ல. இந்திய சமூகம் பலவித பந்தங்களி னுட்பட்டிருப்பதை யுணர்ந்தார். இவ்வித விலங்குகளைத் தகர்த் தெறிந்தாலன்றி இந்திய சமூகத்திற்கு விடுதலை யில்லையென்பதைப் பூர்ணமாக அறிந்தார். சமூகச் சீர்திருத்தத்திற்கும், புதுமை அணிகளின்றி உலவும் தமிழ்த் தாய்க்குப் புதியபுதிய அணிகளைப் பூட்டுவதற்கும் பாடுபட வேண்டுமென்று நினைத்து ஆசிரியத் துறையில் அஞ்சா திறங்கினார்.

ஒவ்வொரு நிமிடமும் கதறிக் கலங்கிக் கண்ணீ ருதிர்க்கும் விதவைகளின் துயரம் இளகிய மனதையுடைய மாதவையாவின் நெஞ்சத்தை உருக்கியது. அவர்கள் கண்ணினின்று விழும் ஒவ்வொரு நீர்த்துளியும் பாரதநாட்டை யென்றுமழியாத் துன்பத்திற்கு ஆளாக்குமென்றும், தற்காலம் நம் நாடு அடிமை நாடாகவிருப்பதின் மூலகாரணம் விதவைகளின் சாபமேயென்றும் அறிந்தார். ஆனால் சமூகத்தின் எண்ணங்களை எவ்விதம் மாற்றுவது? எங்ஙனம் பிரசாரம் செய்வது? பண்டை வழக்கத்தைத் திடீரென மாற்றுவது எளிதா? விதவா விவாக விஷயமாகப் பிரசாரம் செய்துவந்த பிரமுகர்களுடன்கூடி, பகிரங்கப் பிரசாரம்செய்ய முன்வந்தார் தம்மைப்பற்றிப் பலர் பல்வேறு வகையில் நினைக்கலாம். ஆயினும் தாம் பிறந்து தவழ்ந்து வளர்ந்த தமிழ் நாட்டிற்குப் பாடுபடுவோமேயாயின் என்றும் தம் ஆத்மனுக்குச் சாந்தி உண்டு என்று மட்டும் பூர்ணமாக நம்பினார்.

பிரசாரம் என்பது நேருக்கு நேராக விருந்து மேடையின்மீதேறிப் பேச வேண்டுமென்ற அவசியமில்லை. பேனா முனையில் பேசும் ஆற்றல் மிகுந்த ஆசிரியர்களும் பிரசங்கிகளாவார்கள். ஸ்ரீமான் மாதவையா இவ்வித நோக்கங்களையே யுட்கருத்தாய் வைத்து "முத்து மீனாட்சியின் சுயசரிதை" என்ற தலையங்கத்துடன் மாதர் மறுமணத்தை யாதரித்து ஓர் நூல் எழுதினார்.

‘நவீனம்’ என்பது இல்லற வாழ்க்கையின் இன்ப துன்பங்களைக் கண்ணாடிபோல் எடுத்துக்காட்டும் நூல் என்றால், அவ்விதம் உயரிய தமிழ் நவீனங்களில் முதன்மையாகத் தோன்றுவது மாதவையாவின் ‘பத்மாவதி’ என்னும் நூலேயாகும். மனித இயற்கைக்கு முரணாகத் தோன்றும் நூல்களெல்லாம் உண்மை நவீனங்களாகா. ஆயின் தற்காலத்திலோ மனித வாழ்க்கைக்கு முற்றிலும் பொருந்தாப்பலவித அசிங்கங்களுடன் தோன்றும் நாவல்களின் எண்ணிக்கை கணக்கிலகப்படாது. ஒவ்வொரு நவீன ஆசிரியனும், தமிழ்த் தாய்க்குப் பெரியதோர் தொண்டு செய்பவனாகப் பறையடித்துக்கொண்டு கிளம்பினும் உண்மையில் தமிழ்த் தாய் அவர்களது பேனாவின் முனையினால் சித்திரவதை செய்யப்படுகிறாளே யன்றி எவ்விதத்திலும் அவள் அவர்களிடமிருந்தெவ்வித உதவியும் பெறவில்லை. சில நாவல் சிற்றின்ப மோகத்தில் மிதந்து உலகையே பெரிய விபசார விடுதி யாக்கிவிடுமோவென அஞ்சும்படி யிருக்கின்றன. மாதவையாவின் நூற்களோவெனில் சமூக வாழ்க்கையின் எல்லையைத் தாண்டிக் கேவலம் இன்பத்தைமட்டும் ஊட்டுவதற்கெனத் தோன்றிய நாவல்களின் கோஷ்டியைச் சார்ந்ததல்ல. அவர் கருத்து வேறு; உண்மை நோக்கம் வேறு. அதுவே சமூக சேவை; தமிழன்னையின் தொண்டு; ஆத்ம தியாகம்; அன்பு வெள்ளம்; அமுத சுரபி.

பத்மாவதி யென்னும் நாவலை ஓர் அனுபவக் களஞ்சியமென்றே நாம் கூறவேண்டும். தம்முடன் பழகும் நண்பர்களின் குண விசேஷங்களையும், சமூகக் குறைகளையும், தாம் வசித்து வந்த கிராமத்தின் சுற்றுப்புறங்களையும் கூர்ந்து ஆராய்ந்து தம் வாழ்க்கையில் கண்டுள்ள அனுபவங்களையெல்லாம் ஒருங்கே திரட்டி, பத்மாவதி என்ற நாவல் உருவாய் உலகினர்க்குத் தெரிவித்திருக்கின்றார். கதா நாயகி பத்மாவதியைப்போன்ற கற்பரசிகளைக் காண்பது அரிதேயாயினும் அவ்விதம் இருக்கவேண்டுமென ஆதர்சம் காட்டுவது அவசியமே யல்லவா? பத்மாவதி அருந்ததியை யொத்த புனிதவதி; பதி பூஜையையே பிரம்ம பூஜையென நம்பிக்கொண்ட நாரீமணிகளி லொருத்தி. தான் கைப்பிடித்த சணவனின் இன்பமே இவள் இன்பம். நாவல்மட்டுமல்ல, உயர்ந்த கற்பனா விசேஷங்களுடன்கூடி இனிய நடையில் பல சிறு கதைகளையும், நாடகங்களையும் மாதவையா எழுதி வெளியிட்டார். மேல் நாட்டுக் கவியரசர் ஷேக்ஸ்பியரின் ஒதெல்லோவென்னும் நாடகத்தையும் தமிழில் மொழிபெயர்த்தார்.

விஜய மார்த்தாண்டம் என்னும் நவீனம் மிகவும் போற்றற் குரியது. கதா நாயகியைக் கவர்ந்துசெல்லும் கள்வர்கள் முடிவில் எங்ஙனம் அவதியடைகிறார்களென்றும், உண்மைக் காதலின் உயரிய குணங்களையும் உரைக்கும் மேலான நாவலாகும். மாதவையா செய்தது இதுமட்டு மன்று, வெகு நாட்களாகத் தாம் ஓர் பத்திரிகையை நடத்தி நிர்வகிக்கவேண்டுமென்றதோர் அவா இவருக் கிருந்துவந்தது. “பஞ்சாமிர்தம்” என்ற பெயருடன் ஓர் பத்திரிகையை யாரம்பித்து நடத்தி வருகையில் 1925ஆம் அக்டோபர்மீ 22உ யன்று சர்வகலாசாலையில் சரஸ்வதி தேவியின் பாதத்தில் திடீரென ஐக்கியமானார். அவர் நம் முன்னிலையினின்று மறைந்தபோதிலும் அவர் ஒளி மறையவில்லை. புகழ் ஓங்கி வளர்கின்றது. அவர் பெயர் தமிழன்பர்களின் நாசியில் உலவுகின்றது. ஸ்ரீமான் மாதவையாவின் தமிழ்த் தாய்த் தொண்டு தமிழை வளர்க்கப் பாடுபட்ட பெரியோர்களின் தொண்டுடன் சேர்ப்பதற் குரியதாகும். அவரது ஜீவிய சரிதம் பெரியார்களின் சரித்திரங்களுடன் சேர்த்து என்றும் மறவாமல் தமிழன்பர்களின் நன்றியறிதலுக்குரிய தாகுமென்பதற்கு ஐயமில்லை.

[உரிமை ஆசிரியருடையது.]



பைஸைக்கில்

குறிப்பு:—கிராமாந்திரத்தி லிருந்து வந்திருக்கும் தன் தங்கைக்குப் பட்டணத்திலிருக்கும் தமக்கை ஒரு பைஸைக்கில் போவதைக் காண்பித்து பின்வருமாறு சொல்கின்றாள்.

(நோட்டு)

தங்கையே ! பார், தங்கையே! பார்,
ஸைக்கில் வண்டி யிதுவே பார்.
சிங்கார மான வண்டி.
சீமையிலே செய்த வண்டி. (தங்கை)
இரும்பாலே செய்த வண்டி.
எங்கெங்கும் ஓடும் வண்டி. (தங்கை)
மாடில்லை, குதிரையில்லை,
மாயமதாய்ப் பறந்திடும் பார். (தங்கை)
தீயில்லை, புகையுமில்லை,
தீவிரமாய்ச் சென்றிடும்பார். (தங்கை)
ஒன்றன்பின் ஒன்றாக
உருளும்பை தாக்களைப்பார். (தங்கை)
அக்காளும் தங்கையும்போல்
அவைபோகும் அழகைப்பார். (தங்கை)
காலாலே மிதிப்பதனால்,
கடும்விசையில் போயிடும்பார். (தங்கை)

—தேசிகவிநாயகம் பிள்ளை.

சென்னையில் உங்களுக்குத் தெரிய வேண்டியவர்

ஆங்கிலோ-பர்மா பின்மென்

இடம் : 41, பிராட்வே.



4, சல்லியன்ஸ் கார்டன், மயிலாப்பூர்.

சலவை முதல்தரமா யிருக்க வேண்டுமா? சுத்தமாய் உலர்த்தித் தர வேண்டுமா? சாயம் கெடாமல் வெளுத்துக் கொடுக்க வேண்டுமா? வேண்டுமானால், ஆங்கிலோ-பர்மா பின்மென்காரரிடமே உங்கள் துணிகளைப் போடுங்கள்.

☞ கோயில்கள், மசூதிகள், சர்ச்சுகள்—இவைகளுக்கு இலவசச் சலவை.

புஸ்தக விமர்சனம்

(‘குண்டலகேசி’)

[மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை சரித்திரம்——முதற் பாகம் : மகா மகோபாத்தியாய சாமிநாதையா எழுதியது.]

மீனாட்சி சுந்தரம்பிள்ளை பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த தமிழ்ப் பெரியார் ஆவர். இவர் தமக்குக் கிடைத்த தமிழ்நூல்கள் யாவற்றையும் முறையே கற்றுத் தேர்ந்து தமிழ் அறிவு பூரணமாகப் பெற்று விளங்கியவர். தமிழ்ப் பயிற்சியைப் பெரிதும் போற்றி வளர்த்து வந்த திருவாவடுதுறை ஆதீன வித்வானாக இருந்து ஆதீனத்தின் புகழை ஓங்கச் செய்தவர். ஆதீன அறிஞர்களில் மகா வித்துவான் என்னும் பட்டம் பெற்றவர் ; தமிழ்ப் பேரறிஞர்.

இந்த ஜீவிய சரித்திரத்தில் பிள்ளையவர்களின் குணாதிசயங்கள் நம் உள்ளத்தை முதலில் கவர்ந்துகொண்டு விடுகின்றன. இவர் பெரும் முயற்சி செய்து பல இடங்களிலும் இருந்த தமிழ் அறிஞர்களைத் தேடி அவரவர் தேர்ச்சியுற்றிருந்த நூல்களைப் பாடக் கேட்டுத் தம் தமிழ்ப் புலமையை நிரப்பி வந்த முறை இவருக்குத் தமிழ் நூல்களின் பாலுள்ள அளவு கடந்த காதலை அறிவிப்பதாகும். இத்துணை அருப்பெரும் பாடுபட்டுத் தாம் சேகரித்துவந்த வித்தையைத் தம் மாணாக்கர்களுக்கு விசேஷச் சிரமமின்றியும் அவர்களுக்குப் பல சௌகரியங்களும் வசதிகளும் அளித்தும் உவந்து பாடஞ் சொல்லிவந்த பெருமை இவ் அறிஞர்களுக்குச் சிறப்பாக உரித்தாவது. தேம்பாவணி, சீறாப்புராணம் போன்ற புறச் சமய நூல்களையும் கிறிஸ்தவ முகம்மதிய மாணவரிடத்தும் சிறிதும் ஜாதி, மத பேதமின்றித் தம்முடைய அளவற்ற சைவப்பற்றுடனும் இவர் பாடஞ் சொல்லிவந்தது இவருடைய மனோ விசாலத்தையும் இவருக்குத் தமிழ் நூல்களில் உள்ள பெருங் காதலையும் தெரிவிப்பதாகும். இவருக்கும் பிரதாப முதலியார் சரித்திரம் என்ற அற்புதமான வசன நவீனத்தின் ஆசிரியரான வேதநாயகம் பிள்ளைக்கும் இருந்த பெரு நட்புக் குறிப்பிடத்தக்கது. இத்துணை நிரம்பிய கல்வி யறிவுடன் இவரிடத்தில் இருந்த அடக்கமும், தம் எதிரிகளிடத்தும் “நன்னயம்” செய்துவிடும் அருங்குணமும் இவருடைய குண சௌந்தரியத்தின் முக்கிய அம்சங்களாவன. நந்தன் சரித்திரக் கீர்த்தனைகளின் ஆசிரியரான கோபால கிருஷ்ண பாரதியின் மேதையை இவர் உணர்ந்து நடந்து கொண்ட சம்பவம் இவர் பெருமையை விளக்கிக் காட்டுகின்றது.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை செய்யுள் செய்யும் அற்றல் மிகுதியும் பெற்றிருந்தார். அதிக விரைவாகவும் அநாயாசமாகவும் இவர் செய்யுட்கள் இயற்றி வந்தது இவர் காலத்து அறிஞர்களிடையே பேராச்சரியத்தை விளைத்து வந்தது. இவர் செய்திருக்கும் செய்யுட்கள் எண்ணற்றன. இவர் பல் வகைப் பிரபந்தங்கள் இயற்றி யிருக்கின்றார். யமகம், திரிபு, முரண் மடக்குகள் இவர் செய்யுட்களில் மலிந்து கிடக்கின்றன. இவர் கலப்பில்லாமல் ஸ்தல புராணங்கள் பாடி வந்தார்.

ஆனால் யமகம் திரிபுகளும் முரண் மடக்குகளும் சிலேடைகளும் “கால வான் போக்கில் என்றும் கழிவிலாப் பெருமை கொண்ட” கவிதையிலிருந்து முற்றிலும் மாறுபட்டவை என்பது பண்டிதர் உலகத்துக்குப் புதியதொரு செய்தியாகும். உண்மைக் கவிதையின் பிறப்பிடம் மனித இதயத்தின் அமைத்தலங்கள். புலவன் அறிஞனாகவும் இருப்பின் கவிதை அதிகச் சிறப்புடன் விளங்கலாம். ஆனால் கவிஞன் பண்டிதனாக இருந்து தீரவேண்டுமென்ற நியதி இல்லை. சுப்பிரமணிய பாரதிக்கு நமது பண்டிதர்களுக்கு இருக்கும் தமிழ்ப் பயிற்சியில் பத்தில் ஒரு பாகம் கூட இருந்திருக்கும் என்று எண்ண இடமில்லை. ஆனால் அவர் நிரந்தரமான கவிதை செய்து தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியில் முதல் இடம் பெற்றிருக்கிறார். இந்த உண்மை சாராம்சத்தில் நமது முன்னோர்களுக்குத் தெரிந்த தொன்றே யாகும். ஆயினும், உண்மைக் கவிதையின் அம்சங்கள் எவை? கவி அமைப்பில் எந்தெந்த உபாயங்கள் மகா கவிகளால் கையாளப்பட்டு வந்திருக்கின்றன? என்ற ஆராய்ச்சிப் பெருமை தற்காலத்துக்கே உரியதாகும்.

கவிதா ரீதியாகப் பார்க்கும்போது மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் புராணங்களும் அந்தாதிகளும் பிள்ளைத் தமிழ்களும் கோவைகளும் மாலைகளும் இவருடைய செய்யுள் செய்யும் பெருந்திறமைக்குச் சான்று பகர்வனவே யல்லாது இவரைக் கவிஞன் என்று கருதுவதற்கு இடம் தருவன அல்ல. இவர்,

> “நிறைந்த பசுந்தேனும் அடுபாலும்
> தூய கனியுமென மதுரம் விளைந்
> தொழுகு பாடற் கவிதை”

செய்தவரல்லர். கவிஞனுக்கு இன்றியமையாத தீர்க்க தரிசனமும் மனோ பாவமும் உணர்ச்சிப் பெருக்கும் இவர் செய்யுட்களில் காணப்பட வில்லை. அதிகமான கற்பனைகளும் அணிகளும் சைவ சித்தாந்த நூற் கருத்துக்களும் பழைய இலக்கியங்களிலுள்ள சொற்களும் பொருள்களுமே வெகுவாகக் காணப்படுகின்றன. திரி பந்தாதியில் தளிர்த்து யமக அந்தாதியில் அரும்பி மாலையில் போதாகி பிள்ளைத் தமிழில் மலர்ந்து நின்றது இவர் கவிதை என்கிறார் மகா மகோபாத்தியாய சாமிநாதையர். தளிரும் அரும்பும் போதும் மலரும் கனியின் தன்மையைத் தோற்றுவிப்பது இயல்பே யன்றோ? இவ் இயற்கை நியமத்தின்படி மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் ‘கவிதை’ ஸ்தல புராணங்களில் கனிய நேர்ந்தது. அந்தாதிகளும் ஸ்தல புராணங்களும் கவித்துவ சக்தியைக் காட்டுவதற்கு ஏற்றனவன்று என்பதை இவர் பிரபந்தங்கள் மெய்ப்பிக்கின்றன. நிற்க,

மகா மகோபாத்தியாய சாமிநாதையர் தம் ஆசிரியரின் சரித்திரத்தை அரிதில் முயன்று நெடுங்காலமாக விவரங்கள் தேடி மிகுந்த ஆர்வத்துடனும் பக்தியுடனும் எழுதியிருக்கிறார். ஆங்கிலப் பயிற்சியுள்ள தமிழ் அறிஞருள்ளும் சிலர் போலி வசன நடையில் எழுதித் தமிழ்ச் சுவையைக் கெடுத்து வரும் இக்காலத்தில் ஐயரவர்கள் இச் சரிதத்தை எளிய நடையில் மிக அழகாக எழுதி யிருப்பது போற்றத் தக்கது. தமிழன்பர்கள் ஒவ்வொருவரும் இச்சரித்திரத்தைப் படிக்கவேண்டுமென்று வற்புறுத்துகிறோம். இந்தச் சரித்திரத்தின் இரண்டாம் பாகத்தை அதிக ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்

காஸ்லிட்டின் வெளிச்சம்

ஓர் ஆஸாமி வெளிப்பட்டு விட்டார். இந்தியாவில் ஏதோ சில பார்லிமெண்டு அங்கத்தினர்கள் வந்திருப்பதாகச் சங்கில் கூறியிருந்தோமல்லவா? அதில் ஒரு ஆஸாமி அகப்பட்டு விட்டார். காப்டன் காஸ்லிட் என்பது அவர் பெயர். டெல்லிச் சட்டசபை அங்கத்தினர்களங்கிய ஓர் கூட்டத்தில் காப்டன் காஸ்லிட் ஓர் வெளிச்சம் போட்டிருக்கிறார்.

“இங்கிலாந்தின் அரசியல் ஒரே நாளில் ஏற்பட்டுவிடவில்லை. படிப்படியாகத்தான் விருத்தியடைந்தது. அதே மாதிரிதான் இந்திய அரசியலிலும் படிப்படியான விருத்தியையே எதிர்பார்க்கவேண்டும். முதற்படியே வெள்ளைக் கடுதாசித் திட்டம்!” என்கிறார் காப்டன். ஆனால் காப்டன் காஸ்லிட் ஒரு விஷயத்தை மட்டும் நினைவுக்குக் கொண்டுவந்தாரில்லை. இங்கிலாந்து அந்நியர்களால் ஆளப்படவில்லை. ஆனால் இந்தியாவோ அந்நியர்களால் ஆளப்படுகின்றது. அந்நிய ஆட்சி தன் பிடியை இன்றைக்கே விட்டுவிட்டும், மறுநாளே முதல்தரமான ஓர் அரசியல் திட்டத்தைச் சுதந்திர இந்தியா வகுத்துக் கொள்கின்றதா இல்லையா வென்பதைப் பார்க்கமுடியும். கொழுக்கட்டைக்குத் தலைப்புப் பார்த்துக் கடிக்கவேண்டுமா? சுதந்திரமுள்ள நாடாயிருந்தால், அரசியல் முன்னேற்றத்துக்கு முதற்படி இரண்டாம்படி என்று உண்டா?

காப்டன் காஸ்லிட் கொஞ்சம் சவடாலாகவும் பேசியிருக்கிறார். “பல வருடங்களுக்கு முன்னே இந்தியாவுக்கு நாடோடியாகத்தான் ஆங்கிலேயர்களாகிய நாங்கள் வந்தோம். ஆனால் நாளடைவில் இந்த தேசத்துக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற ஆசை எங்களுக்கு ஏற்பட்டது. சேவை செய்தால்தான் இங்கு வாழ்வதற்கு எங்களுக்கு உரிமையுண்டு. இந்த நாட்டுக்குச் சேவை செய்துகொண்டு இங்கு வாழத்தான் போகிறோம்” என்கிறார் காஸ்லிட்! ஆஹா! என்ன அருமையான சேவகம்! என்ன விந்தையான சேவகர்கள்! சேவை செய்வதே ஆங்கிலேயர்களின் லட்சியமானால், சம்பளமில்லாமல், படிச் செலவில்லாமல் இங்கு வேலை பார்ப்பதற்கு எத்தனை வெள்ளைக்காரர்கள் தயாராயிருக்கிறார்களென்று காப்டன் காஸ்லிட் ஒரு கணக்குத் தருவாரா?

கொழுத்த சம்பளங்களை வாங்கிக்கொண்டு உத்தியோகங்களை வகிப்பதற்குச் ‘சேவை’ என்ற பதம் பொருத்தமோ? இந்தியர்களுக்காகக் கசிந்து லங்காஷயரில் ஏராளமான துணி உற்பத்தி செய்து அனுப்புகின்றார்களே, அதுவும் இந்தத் தேசத்திற்கு வெள்ளைக்காரர் செய்யும் ‘சேவை’ யென்று கொள்ளவேண்டுமோ? போதுமையா சேவகம்! ‘சேவகரால் பட்ட சிரமம் மிக உண்டு கண்டீர்’ என்ற பாரதியாரின் வரிகள்தான் நமது ஞாபகத்துக்கு வருகின்றன.

சிட்டாய்ப் பறந்த சேஷசாயி!

தமிழ்நாட்டின் விமான வீரன்

சிட்டுக் குருவிபோலத் தமது ஆகாய விமானத்தைப் பறக்கவிட்டுக் கொண்டிருந்த ஸ்ரீயுத சேஷசாயி மரணமடைந்தார் என்ற செய்தி கேட்டுத் திடுக்கிட்டு விட்டோம். திருச்சினாப்பள்ளி சேஷசாயியைத் தமிழரில் அநேகர் நேரில் கண்டிருக்க மாட்டார்கள். ஆனால் சேஷசாயியின் ‘சேஷ விமானமாம்’ ‘விர்’ என்று பறந்து போகும்போது அநேகர் பார்த்திருப்பார்கள். ஆகாய விமானத்தை அந்தரடிக்கும்படி செய்தல், வளைய வளைய வருதல் முதலிய ஜாலக்குகளைக் காட்டுவதில் ஸ்ரீயுத சேஷசாயி மிகத் திறமை பெற்றிருந்தார். ஆனால் சென்ற ஞாயிறன்று அவரது விமானமே அவரை ஏமாற்றி விட்டதே என் செய்வது!

காலை பத்து மணிக்குத் திருச்சினாப்பள்ளிக்கு உயர, தமது நண்பர் ஒருவரை விமானத்தில் வைத்துக்கொண்டு சேஷசாயி பறந்துகொண்டிருந்தாராம். விர் என்று தாழ இறங்கி வரும்போது 4 அடி உயரத்தில் விமானம் தலைகீழாகத் தரையோடு மோதிற்றாம். வீரர் சேஷசாயிக்கு உடலெல்லாம் காயமாயிற்று. ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனார்கள். அங்கு அவரது ஆவி உடலைவிட்டுப் பறந்து போய்விட்டது.

தமிழருக்கும் ஆகாய விமானஞ் செலுத்தத் தெரியுமென்பதை நிரூபித்துக்கொண்டு வீரனாக வாழ்ந்த சேஷசாயியைத் தமிழ்நாடு இன்றைக்கு இழந்து விட்டதென்னவோ வாஸ்தவம். ஆகாய விமான கமனம் தேசத்தின் பௌருஷத்துக்கு அடையாளமாகும். இந்த விமானப் பயிற்சியில் மேனாடுகள் எவ்வளவோ உயிர்ப்பலி தந்திருக்கின்றன. பத்து நாளைக்கு முன்னரேகூட ருஷியாவில் மூன்று ஆண் ‘சிங்கங்கள்’ அலுமினியக் கூண்டில் ஏறி ஆகாயத்தில் 13 மைல் உயரத்தில் பறந்த காரணத்தால் ஏதோ பிசகு நேர்ந்து கூண்டு ஒரு புறமும் பிரேதங்கள் ஒரு புறமுமாக விழுந்து பலியாயினர். வீரச் செயல்களில் தரும் பலி எப்போதும் வீணாகாது. தேசத்தின் கவுரவத்தைக் காப்பாற்றுபவர் இத்தகைய வீரர்கள்தான். தமிழகம் எல்லா நாடுகளோடும் அணிவகுத்து நிற்கவேண்டுமானால் எவ்வளவோ சேஷசாயிகளைப் பலி தரவேண்டியிருக்கலாம். அதற்குத் தேசம் பின் வாங்கலாகாது. சேஷசாயி ஓர் தேச பக்தர். மகாத்மாஜீ விஜயத்தின்போது ஆகாயத்தில் விமானத்தினின்று புஷ்பமாரி பெய்தவர். மேலும் தமிழரின் தைரியத்துக்கு அறிகுறியாயிருந்த சேஷசாயின் வீர மரணத்தை நாம் என்றும் மறக்கமாட்டோம்.

—ஸ. ஸ.

மாகாண ஹரிஜன ஊழியர்

கோடம்பாக்கத்தில் கூட்டம்.

சென்னை மாகாண ஹரிஜன ஊழியர் சங்கக் காரியதரிசி பின் வரும் சுற்றறிக்கையை மேற்படி போர்டு அங்கத்தினர்களுக்கு அனுப்பியிருக்கிறார்:

“வேலூரில் கூடுவதாயிருந்த மாகாண ஹரிஜன போர்டுக் கூட்டத்தை, மகாத்மாஜியின் சௌகரியத்தை உத்தேசித்து, கோடம்பாக்கத்தில் கூட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 20—2—34 தேதி மாலை 2 மணிக்குக் கோடம்பாக்கம் கைத்தொழிற் கலாசாலையில் கூட்டம் நடைபெறும். இடம், ஆகாரம் முதலிய வசதிகள் செய்துதர, ஸ்ரீமான் எஸ். கணேசன் அன்புடன் இசைந்திருக்கிறார்.”

உண்ட வீட்டுக்கு ரண்டகம்

சீமையில் இந்தியப் பாதுகாப்புச் சங்கம் என்று ஒரு சங்கம் இருக்கிறது. இந்தியாவுக்குச் சுயேச்சை நிலை ஏற்படாமல் எவ்வளவுக்கெவ்வளவு தடுக்க முடியுமோ அவ்வளவையும் செய்வது இந்தச் சங்கத்தின் வேலை. இந்தச் சங்கத்தின் வருடாந்திர அறிக்கையில் ஒரு விஷயம் காணப்படுகிறது. "இந்தியாவில் உத்தியோகம் பார்த்துவிட்டுச் சமீபத்தில் திரும்பியவர்களுள் பெரும்பாலோர் நமது சங்கத்தில் அங்கத்தினரா யிருப்பது குறிப்பிடத்தக்கது" என்று அவ்வறிக்கை கூறுகின்றது. இந்தியாவுக்குச் சுயேச்சை அரசியல் ஏற்படாதவாறு தடுப்பதில் இந்தியாவில் உத்தியோகம் பார்த்த வெள்ளையர்களுக்கே மிக்க அக்கரை யேற்பட்டிருக்கிறது என்று இதனின்றும் தெரிகிறது. இந்தியாவி லிருக்கும்வரை எல்லோருடனும் கை குலுக்குவதும், "இந்தியர்களைப்போல உண்டா?" என்றுவாய்ச் சவடால் அடிப்பதற்கும், இங்கிலாந்துக்குப் போனவுடன் வேறு விதமாக நடப்பதற்காகவுமா இங்கே பெரிய சம்பளம் தருகிறோம்? உண்ட வீட்டுக்கு ரண்டகம் நினைக்கும் இந்தக் கும்பலை என்னென்று கூறுவது?

ஒண்ட வந்த பேர்வழிகள்

தென்னாப்பிரிக்கா என்ற பூமிக்கு வெள்ளைக்காரர்களும் ஒண்ட வந்த பேர்வழிகள்தான். ஆனால் அங்கு போய்க் குடியேறியுள்ள நமது இந்திய சகோதரர்களை அங்கிருந்து விரட்டுவதற்கு என்னென்ன சாகசக்கியங்கள் செய்ய வேண்டுமோ அத்தனையும் செய்துகொண் டிருக்கிறார்கள். இப்போது அங்குள்ள வெள்ளையர்கள் ஒரு ஆலோசனை செய்கிறார்களாம். "போர்னியோ தீவில் இடமிருக்கிறதாம். நியூகினீ என்ற இடத்துக்கு ஆட்கள் வேண்டுமாம். அங்கு இந்தியர்கள் முற்றிலும் நிறைவதற்கும் அரசாட்சி இந்தியப் பிரதிநிதிகள் கைக்குக் கிடைக்கும்படியும் ஏற்பாடுகள் செய்கிறோம். போகின்றீர்களா?" என்று கேட்கின்றார்களாம். 'சத்திரத்துச் சோற்றுக்குத் தாத்தய்யங்கார் உத்தரவா?' எந்த நாட்டுக்காவது போனாலும் அங்கு தமது உழைப்பினால் இந்தியர்கள் பெயரெடுப் பார்களென்பது நிச்சயம். ஆனால் அங்கேகூட இந்த வெள்ளையர்களின் சந்ததியார் வரமாட்டார்களென்பதற்கு உறுதிதானுண்டா? தென்னாப்பிரிக்காவானது வெள்ளையர்களுக்கு எவ்வளவு உரிமையானதோ அதை விட இந்தியர்களுக்குத்தான் உரிமை யதிகம். ஏனெனில் அந்த நாட்டை விருத்தி செய்தது முழுவதும் இந்தியர்களின் உழைப்பு. இந்த மாதிரி அங்குள்ள வெள்ளையர்கள் நமது சகோதரர்களுக்கு ஆசை காட்டி மோசங்கள் பண்ணிக்கொண் டிருப்பதை இந்திய அரசாங்கமும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் பார்த்துக் கொண்டு வாளா விருக்கின்றனவே, அதுதான் வெட்கக்கேடு.

ராட்டைக்கு லட்ச ரூபா

சிறந்த ராட்டை யொன்றைக் கண்டு பிடித்துத் தருவோருக்கு லட்ச ரூபா பரிசு தருவதாக அகிலபாரத சர்க்கா சங்கம் சொல்லிற்றல்லவா? அதற்கு யந்திரங்களைத் தயாரித்திருப்பவர்கள் இந்த மாதம் 26௳ முதல் மார்ச்சு 3௳ வரை அஹமதாபாத் ஹரிஜன ஆசிரமத்தில் தங்கள் ராட்டைகளோடு ஆஜராயிருக்க வேண்டுமெனக் காரியதரிசி அறிவித்திருக்கிறார்.

மணியார்டர் கமிஷன் இல்லை

பாபுராஜேந்திரப் பிரசாத் சேர்த்து வரும் பூகம்பக் கஷ்ட நிவாரண நிதிக்கு அனுப்பப்படும் பணங்களுக்கும் இனி மணியார்டர் கமிஷன் தரவேண்டாமென, சர்க்கார் உத்தரவு போட்டுவிட்டார்கள். இதுவரையில் ஸ்ரீராஜேந்திரப் பிரஸாதின் நிதிக்கு அனுப்பப்பட்ட தொகைகளுக்கு ஆயிரக் கணக்கில் மணியார்டர் சார்ஜ் ஆகக் கொடுத்திருப்பதையும் கணக்குப் பார்த்துக் கஷ்ட நிவாரண நிதிக்குச் சர்க்கார் கொடுத்துவிட்டால் நல்ல தல்லவா?

ஸபர்மதி ஆசிரமம்

ஸபர்மதி ஆசிரமம் இத்தனை வருடங்களாகச் சர்க்காருக்கு வரி செலுத்தாதிருந்ததல்லவா? மகாத்மாஜீ ஆசிரமத்தைக் கலைத்துவிட்டுப் போன பின்பு ஹரிஜனங்களின் வாசத்துக்கு அந்த ஆசிரம இடங்கள் தரப்பட்டு விட்டன. சர்க்காருக்குச் செலுத்த வேண்டிய நில வரியையும் கொடுத்து விட்டார்களாம். ஆங்குள்ள ஹரிஜனங்களுக்குச் சேவை செய்வதற்காக மகாத்மாஜீயின் ஜர்மன் சிஷ்யையான 'ஷ்பீகல்' என்ற மாது ஸபர்மதிக்குப் போயிருக்கின்றாள்.

யுத்தத்துக்கு உதவி செய்து இந்தியா பெற்ற சன்மானம்

ஐரோப்பிய மகா யுத்தம் நடந்தபோது அதன் அபாரச் செலவுக்கு இந்தியா அளவிலா உதவி செய்தது. 1919-20௵ வரை கணக்குப்படி 14½ கோடி பவுன்களை இந்தியா யுத்தச் செலவுக்குத் தந்திருக்கிறது. இது தவிரப் பிரத்தியேகமாக 5½ கோடி பவுனுக்குமேல் இதர யுத்த தளவாடங்களுக்காக இந்தியா செலவழித்திருக்கிறது. யுத்தத்துக்காக இந்தியா இவ்வாறு பணஉதவி செய்திராமல் அந்தப் பணத்தைத் தன்மீது சுமத்தப்பட்டுள்ள கடன்களைப் போக்குவதற்கு முயன்றிருக்குமானால், இப்போது ஏறியுள்ள (507 கோடி) கடன் தொகை இருக்கவே இருக்காது.

220 கோடி ரூபாய்களைக் கேவலம் யுத்த தானமாக இந்தியா தந்திராவிட்டால் இவ்வளவு கடன் சுமை இந்தியா மீது ஏறியிருக்குமா? தாங்கள் கொடுத்துள்ள கடன் தொகைக்காகப் பாதுகாப்புகள் வேண்டுமென்று சில ஆங்கிலேயர்கள் கூச்சலிடுகின்றார்களே அதற்குத் தான் இடம் இருந்திருக்குமா? இந்த தேசத்திற்கு ஸ்வராஜ்யம் தந்தால் தங்கள் பணத்துக்குமோசம் வந்துவிடும் என்று சிலர் கொக்கரிக்கின்றார்களே, அவர்கள்தான் பேச முற்படுவார்களா? இந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் வேறெந்த நாடும் இந்தியா செய்தது போல யுத்தத்தில் பிரிட்டிஷாருக்கு உதவ வில்லை. லட்சணக்கணக்கான ஆட்களையும் இந்தியா பலி கொடுத்தது. இந்த அபாரமான தியாகத்தை எண்ணும்போது இங்கிலாந்துக்குக் கிடைத்த வெற்றியை என்னென்று கூறுவது?

சென்ற மகாயுத்தத்தில் அயர்லாந்து ஒரு பவுன்கூட பிரிட்டனுக்கு உதவி செய்யவில்லை; ஓர் ஆளைக்கூட மனதொப்பி அனுப்பவில்லை. அயர்லாந்தைப் போல இந்தியாவும் விட்டேத்தியாக அக்காலத்தில் இருந்திருக்குமாகில், இன்றைக்கு இந்தியாமீது இவ்வளவு கடன் ஏறியிருக்காது. அன்று தான் காட்டிய பக்திக்கு இந்தியாவுக்கு இதுதான் சன்மானமா? ராஜீய அடிமைத் தனத்திலேயே சதா இந்தியாவை இறுகப் பிணித்து வைக்க முயற்சிக்கின்றார்களே, இதுதான் பிரதியுபகாரமா?

—ஹிந்து அப்ஸர்வர்.

காந்திஜி விஜயம்

(கடைசி வார அலுவல்கள்)

கடைசியாகப் போடப்பட்டுள்ள புதிய திட்டப்படி காந்திஜியின் வரும் வாரப் பிரயாண விவரம் வருமாறு :—

16-2-34 வெள்ளிக்கிழமை

காலை 7-0 நாகப்பட்டணத்திலிருந்து சியாழிக்குப் புறப்பாடு (வழியில் நாகூர், காரைக்கால், மாயவரம்.)

11-7 சிதம்பரம்.

16-2-34 சனிக்கிழமை

காலை 9-6 கூடலூர்.

9-40 காந்திக் குப்பம்.

11-0 கிருபாசிரமம்.

மாலை 4-45 திருவண்ணமலை.

8-53 வேலூர்.

18-2-34 ஞாயிற்றுக்கிழமை

மாலை 1-0 திருப்பத்தூருக்குப் புறப்பாடு. (வழியில் காட்பாடி, குடியாத்தம், ஆம்பூர்.)

4-15 கிருஸ்துகுல ஆசிரமம்.

இரவு 9-0 ஜோலார்ப்பேட்டை.

19-2-34 திங்கட்கிழமை.

காலை 5-30 கோடம்பாக்கம் (மௌன தினம்.)

20-2-34 செவ்வாய்க்கிழமை.

மாலை 2-0 கோடம்பாக்கம் பொதுக் கூட்டம்.

2-30 மாகாண ஹரிஜன ஊழியர் சங்கக் கூட்டம்.

21-2-34 புதன்கிழமை.

காலை 6-50 காஞ்சிவரத்துக்குப் புறப்பாடு. (வழியில் செங்கல்பட்டு பிளாட்பார வரவேற்பு.)

9-58 காஞ்சிவரம்.

மாலை 7-30 ஆரணி.

இரவு 9-15 அரக்கோணம்.

10-42 பங்களூர், மைசூர் வழியாகக் குடகு மாகாணத்துக்குப் பிரயாணம்.

[காந்திஜீயின் கோஷ்டியைச் சேர்ந்தவர் புதன்கிழமை சென்னையில் தங்கி யிருந்து, ஸென்டிரல் ஸ்டேஷனில் டிரெயின் ஏறுவார்கள்.]



ஆண்டவன் தண்டனைதான்

(தாகூருக்கு மகாத்மாவின் பதில்)

[ஹிந்துக்களின் தீண்டாமை வழக்கம் என்ற பாவத்திற்காக, ஆண்டவன் விதித் தண்டனையே பீஹாரப் பூகம்பம் என்று மகாத்மா அடிக்கடி சொல்லி வருகிறார். கவி திலகர் ரவீந்திர நாத தாகூர் இதை மறுத்து, பத்திரிகைகளுக்கு ஒரு அறிக்கை விடுத்தார். மகாத்மா அவ்வறிக்கைக்கு எழுதியுள்ள பதில் கீழே தரப்பட்டிருக்கிறது.]

பூகம்பம் ஏற்பட்டதன் காரணம் கடவுளுக்குச் சபல சித்தம் ஏற்பட்டதா? அல்லது குருட்டுச் சக்திகள் முட்டி மோதியதா? நான் அப்படி நினைக்கவில்லை. ஆண்டவனின் சட்டங்களை நாம் அறியோம்; அவை நடக்கும் போக்கும் நமக்குத் தெரியாது. மிக உன்னதமான ஸயின்ஸ் நிபுணனாய்த்தானிருக்கட்டுமே; அதி மேதாவியான ஆவியுலக ஆராய்ச்சிக்காரனாகத்தானிருக்கட்டுமே—அவர்களது ஞானமெல்லாம், இவ்வகண்ட மண்ணிலே ஓர் அணுவையே போன்றது. எனது இம்மண்ணுலகத் தந்தைபோல், ஆண்டவன் ரூபமுடையவரா யில்லா திருக்கலாம். ஆனால், என் தந்தையினும் பல மடங்கு சிறந்த தந்தையே அவர். எனது மிக அற்ப காரியங்களிலெல்லாம் அவர் என்னை ஆண்டு செல்கிறார். 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்பதை, நான் எழுத்தெழுத்தாய் நம்புகிறேன். நான் சுவாசிக்கும் ஒவ்வொரு மூச்சும் அவர் கருணையால்தான்.

அவர் வேறே, அவருடைய சட்டம் வேறே அல்ல. சட்டமே அவர். அவருக்குச் சொல்லப்படும் குணங்கள், வெறும் விசேஷணங்களல்ல. குணமே அவர். சத்யம் அவரே; அன்பும் அவரே; தர்மம் அவரே. இன்னும் மனித சாமர்த்தியத்தால் நாமமிட்டழைக்கக் கூடிய கோடி கோடியான பெருமைகளும் அவரே. சர்வ லோகத்துக்கும் பொதுவான ஈசனின் சட்டம் ஒரே நிர்ணயமானதுதான்; அதன் நியதியிலே ஆண்டவன் குறுக்கிடுவதில்லைதான். ஏனெனில், கடவுளே சட்ட ரூபியன்றோ? எனினும், சட்டங்களுக்கெல்லாம் பெரும் சட்டமான அதை நாம் முற்ற முடிய அறியோம். அப்படி அறியாததால்தான், இத்தகைய விபத்துக்களைப் பற்றி விபத்து என்பதைத் தவிர வேறொன்று மறியா திருக்கின்றோம்.

பஞ்சம், வெள்ளம், பூகம்பம் முதலியனவெல்லாம் பிரக்ருதியின் செயலென நமக்குத் தோன்றினும், மனித ஒழுக்கத்தோடு ஏதோ சம்பந்தமுடையவையே யென்று நான் கருதுகிறேன். ஆதலால்தான், பீகார்ப் பூகம்பம் நமது தீண்டாமைப் பாவத்தின் தண்டனை என்று எனக்கென்னவோ தானாகவே ஓர் எண்ணம் உண்டாயிற்று. இந்த பூகம்பம் எவ்வளவு ஆபத்தானது என்பதை நான் நன்றாக அறிவேன். என்றாலும், எனதருமைத் தோழரான ஜனங்கள் துன்பப்பட்டுக்கொண் டிருக்கின்றார்கள். இப்பேர்ப்பட்ட சமயத்தில் மிகப் பகிரங்கமாய் எனது நம்பிக்கையைக் கூறவேண்டாமா? கேலிக்குப் பயந்து அதை ஒளிப்பேனானால், நான் பொய்யனாய்க் கோழையாய்ப் போய்விடுவேனன்றோ?

பூகம்பத்தால் ஏற்பட்ட இலௌகிக நஷ்டங்கள் சீக்கிரத்திலே மறந்து போம்; அல்லது ஓரளவு ஈடு செய்யப்பெறும். ஆனால், அது நமது தீண்டாமைப் பாவத்துக்கு ஆண்டன் விதித்த தண்டனையாக விருந்து, அதனின்றும் நாம் கற்கவேண்டிய பாடத்தை யறியத் தவறிவிட்டோமானால், பெரு நஷ்டமன்றோ விளையும்.

பிரக்ருதிக்கும் ஆத்மனுக்கும் பிரிக்க முடியாததோர் தாம்பத்யம் ஏற்பட்டிருக்கிறது. இந்தக் கூட்டுறவால் விளையும் விளைவுகளைப் பற்றி நமக்குள்ள அறியாமையால்தான், நாம் அதிசயமும் பயமும் அடைகிறோம். இப்படி அதிசயித்துப் பயப்படுவதால், அந்த விளைவுகளை மாற்றிவிட முடியாது. ஆனால், பிரக்ருதி-ஆத்மன் 'தாம்பத்ய ஞானத்தைத் தனது ஜீவனோடு ஜீவனாய் உணர்ந்து கொண்ட பல்லோர், மண்ணுலக ஆபத்து ஒவ்வொன்றையும் தத்தம் ஒழுக்கம் உயரப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வகண்ட உலகத்தின் நிகழ்ச்சிகளுக்கும் மானிட நடத்தைக்கும் சம்

யாத்ரா மார்க்கம்

"வியாபாரச் சரக்கல்ல"

"வாழ்க்கை ஓடுகிறது என்பார்கள். ஆனால், என்னிடமோ நாட்கள் ஓடிவிடுகின்றன. நடந்து கழிந்த சம்பவங்களைப்பற்றிய தெளிவான சித்திரம் தருவது அசாத்தியமாகும்" என்று காந்திஜீ கூறினார். காந்திஜீ தொடர்ச்சியாகச் செய்துவந்த பிரயாணம் முதன் முதலில் கூனூரில்தான் ஒரு வாரத்திற்கு நிறுத்தப்பட்டது. அங்கும் அவசரமாய் நண்பர்களும் பிறரும் பார்க்க வந்தபொழுது, காந்திஜீ அவர்களை மறுக்க முடியவில்லை.

உதகமண்டலம் வரவேற்புக் கமிட்டியார் ரூ. 856 கொடுத்துவிட்டு, தங்கள் தொகை சிறியதென்று வருத்தப்பட்டார்கள். காந்திஜீ அவர்களுக்குக் கூறிய சமாதானமாவது:—'இந்த இயக்கம் சில பணக்காரர்களுக்கு மட்டும் சொந்தமல்ல; கோடிக்கணக்கான ஏழைகளுக்கும் சொந்தமாகும். ஆத்மத் தூய்மை என்பது வியாபாரச் சரக்கல்ல; சந்தைக் கடையில் வாங்கி விற்கும் பண்டமல்ல. ஆகையால், தனவந்தர்கள் கொடுக்கும் ஆயிரக்கணக்கான ரூபாயைப்போலவே, கோடிக்கணக்கான ஏழை மக்கள் தரும் செப்புக் காசுகளையும் இன்னும் அதிக சந்தோஷமாய் வாங்கிக்கொள்ளுகிறேன். ஆனால், கொடுப்பவர்களின் ஹ்ருதயம் பரிசுத்த மடைந்திருக்கவேண்டும். இந்தக் காசு அதன் அடையாளமா யிருக்கவேண்டும். இல்லாவிட்டால், இதனால் பயனில்லை. ஏதாவதோர் மனிதர் கோடி ரூபாய் கொடுத்தால்கூட, தீண்டாமைப்பேய் ஒழிந்துவிடாது. கோடிக்கணக்கணக்கான ஒவ்வொரு சவர்ண ஹிந்துவும் முயற்சி யெடுத்துக் கொண்டால்தான் தீண்டாமைப் பேய் மாயும்."

"ஆத்ம சமர்ப்பணம்"

ஒய்வு ஸ்தலத்தில் வந்து கண்ட ஒரு ஹரிஜனப் பிரதிநிதிக் கூட்டத்தின் பேட்டி முடியவேண்டிய தருணம். மாலைப் போஜனத்துக்கு நேரமாகிவிட்டது. அப்பொழுது காந்திஜீ "எனது முழு ஆத்மாவையுமே இவர்களிடம் சமர்ப்பணம் செய்யாமல், இவர்களை எப்படி அனுப்புவேன்? அது இயலாது" என்றார். கடைசியில், அவர்களிடம் அவர் சொன்னதாவது:—"எரவாடா ஒப்பந்தம் நிறைவேறுவதற்கு என்னை நீங்கள் பிணையமாக வைத்திருக்கிறீர்கள். அதனால்தான் நான் இந்தியாவின் ஒரு கோடியிலிருந்து மறு கோடிக்குப் பிரயாணம் செய்துகொண்டிருக்கிறேன். எரவாடா ஒப்பந்தத்தோடு நான் திருப்தி யடைந்துவிடவில்லை."

"ஆசி நிறைந்த ஆரஞ்சுகள்"

இந்தச் சம்பாஷணை முடிந்தவுடன் அந்தக் கூட்டத்தில் வந்திருந்த ஒரு முது கிழவி சில ஆரஞ்சுகளைக் காந்திஜீயிடம் கொடுத்தாள். அவற்றைப் பெருங் களிப்புடன் காந்திஜீ வாங்கிக்கொண்டு "இவற்றை நான் சுட்டாயம் சாப்பிடப் போகிறேன், அம்மா. ஏனெனில், இவற்றில் உனது ஆசீர்வாதங்கள் நிரம்பியிருக்கின்றன" என்றார். அந்த நண்பர்கள் மகிழ்ச்சியும் சிரிப்பும் நிறைந்தவராய்ப் பிரிந்து சென்றார்கள்.

"பொங்கிய எழுச்சி"

கோயமுத்தூரில் காந்திஜீ பேசிய வார்த்தைகளை ஹரிஜன ஊழியர் கவனிக்கவேண்டும். அவர் சொல்லியதாவது:—"நான் எங்கே போனாலும் சரிதான்; ஹிந்து சமூகத்திலே பொங்கியதோர் எழுச்சி ஏற்பட்டிருப்பதைக் கண்டு வருகிறேன். நான் இந்தியாவில் பிரயாணம் செய்தபோதெல்லாம் பெருந் திரள் கூடுவதைக் கண்டிருக்கிறேன்; ஆனால், இந்தத் தடவை இடந் தவறாமல், மிகப் பெருந் திரளான ஜனங்கள் கூடி வருகின்றனர். நான் என்ன காரியமாக வந்திருக்கிறேன் என்பதை மிகத் தெளிவாக ஜனங்களுக்குத் தெரிவிக்க, சாத்தியமான சகல முயற்சிகளும் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகையால், அவர்கள் ஏராளமாக வந்து கூடுவதும், செப்பு வெள்ளிக் காசுகளைக் கொடுப்பதும், சந்தேகமின்றி நான் சொல்லும் சீர்திருத்தத்திற்குத் தாங்கள் தயார் என்று ஜனங்கள் காட்டும் அடையாளங்களேயாகும் என்று நான் கருதுகிறேன். இப்படியிருந்தும், தீண்டாமைத் தீமை நிர்மூலமாய்க் களையப்படவில்லையானால், அது ஜனங்களின் குற்றமாகாது; ஆனால், இன்று உழைத்துக்கொண்டிருக்கும் ஹரிஜன ஊழியர்களுடைய குற்றமேயாகும். ஆகையால், எனது சகாக்களான ஊழியரும் தலைவர்களும் இவ்வியக்கத்தின் உட்கருத்தை நன்றாய் விளங்கிக்கொள்ள வேண்டுமென்பது என் விருப்பம். இது ஆத்ம பரிசுத்த இயக்கம்; ஆத்ம த்யாக இயக்கம்; பல நூற்றாண்டுகளாகத் தாங்கள் கொடுமையாக அடக்கிவைத்த ஜனங்களுக்குச் சவர்ண ஹிந்துக்கள் பட்ட கடனைத் தீர்ப்பதற்காகத் தோன்றிய இயக்கமாகும். இதனை ஹரிஜன ஊழியர் நன்றாய் உணர்ந்துகொள்ளவேண்டும்."

—"ஹரிஜன்"

ஏலக்காய் மாலை

மகாத்மாஜீ 'கோம்பை' என்ற ஊருக்குப் போயிருந்த போது மொஹிதீன் பிள்ளை ராவுத்தர் என்ற நண்பர் ஏலக்காய்களினால் தொடுக்கப்பட்ட மாலையொன்றை அய்யனுக்கு அணிவித்தார். ரோஜா மாலையாயிருந்தால் நறுமணம் வீசும். கதர் மாலையானால் உழைப்பு மணம் வீசும். ஏலக்காய் மாலை அதன் 'ருசி'யை நினைப்பூட்டும். அந்த மாலையையும் அய்யன் அடுத்த ஊரில் ஏலம் போட்டு விட்டார்.

பந்தமுண்டு என்பதே எனது பலமான நம்பிக்கை. அந்த நம்பிக்கைதான், என்னை வர வர அதிகமாய் ஆண்டவனின் அருகே கொண்டு சேர்க்கின்றது; எனது பணிவு அதிகமாகின்றது; அவனை நேருக்கு நேரே சந்திக்க, மேலும் மேலும் தயாராகி வருகிறேன். இத்தகைய நம்பிக்கையை நான் எனது எதிரியைத் திட்டுவதற்கோர் சாதனமாய்க் கொள்வேனானால் மட்டுமே, இது என்னை வீழ்த்தும் மூட நம்பிக்கையாகும். நான் அப்படிச் செய்யவில்லையே

—"ஹரிஜன்"

நந்தனார் கீர்த்தனைச் சுருக்கம்

(தொகுத்தவர்: சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்)

விலை அணா 2.

கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகளில் முக்கியமான பலவற்றையும் ராஜாஜீ பொறுக்கித் தொகுத்திருக்கிறார். மாஜி ஹைகோர்ட் ஜட்ஜி வி. பாஷ்யம் அய்யங்காரின் நேர்த்தியான முகவுரையுடன் கூடியது. சுத்தமான பதிப்பு. டெம்மி 1×8 அளவில் 50 பக்கங்கள்.

சுதந்திரச்சங்கு புத்தகசாலை,
திருவல்லிக்கேணி, சென்னை.

புதிய ஆசிரியருக்கு

சில தினங்களுக்கு முன் நடந்த சம்பாஷணை. அவர் இப்பொழுது தமிழ் நாட்டில் பிரபலமடைந் திருக்கும் பத்திரிகைகளுள் ஒன்றின் பொறுப்பை எற்றுத் திறப்பட நடத்தும் ஆசிரியர். அந்த ஆசிரியர் சில பெரிய மனிதருடன் பேசிக் கொண்டிருந்தார். நானும்கூடப் பக்கத்தில் நின்று கேட்டுக் கொண்டிருந்தேன். "தமிழ் நாட்டில் இப்பொழுது எழுதுவோருக்குப் பஞ்சமே கிடையாது, ஸார்" என்று அவர் சொன்னார். நான் ரொம்ப சந்தோஷ மடைந்தேன். அவர் சொன்னது வாஸ்தவம் என்பதில் தடையில்லை.

ஆனால், ஒரே ஒரு குறைமாத்திரம் இருப்பதாகத் தோன்றுகிறது. புதிய ஆசிரியர்கள் தமிழ் நாட்டில் ஏராளமாகி வருகிறார்க ளானாலும், அவர்களுக்குச் சரியான வழிகள் இன்னும் புலனாக வில்லை என்றே அஞ்சவேண்டி யிருக்கிறது. ஒரு பத்திரிகாலயத்தில் இருந்தால், இது நன்றாகக் காணப்படும்.

எழுதுவோருக் கெல்லாம், தமிழ் நாட்டில் இன்று இரண்டே மோகம் தான் அதிகமாகப் பிடித்திருப்பதாகத் தோன்றுகிறது. ஒன்று கதை எழுதும் ஆசை; மற்றொன்று ஹாஸ்யத்தில் விருப்பம். கதை எழுதக்கூடா தென்றோ, விகடம் ஆகாதென்றோ, சொல்லுவது தவறு. ஆனால், "தொட்டதெல்லாம் தங்கமானால், பித்தளைக்குத் தாளம்" அல்லவா? இதை வேண்டுமானால், "தொட்டதெல்லாம் செம்பானால், பவுனுக்குத் தாளம்" என்று மாற்றி வைத்துக் கொண்டாலும் ஆட்சேபனை யில்லை. "ஹாஸ்யம் என்றால், அது நவரசத்தில் ஒன்பதில் ஒரு பாகந்தான்" என்று ஸ்ரீமான் வ. ரா. தெரிவித்தார். இதுதான் உண்மை. கதையும் இதேபோல, நாநாவித எழுத்துக்களில் ஒரே ஒரு அம்சமேயாகும்.

கதையில்கூட, பல பல மாதிரிகள் எழுதவேண்டுமென்பதைப் புதிய ஆசிரியர் பெரும்பாலும் கவனிக்கமாட்டேனென்கிறார். குழந்தையின் மனோதத்துவத்தைப் பற்றி ஒரு கதையைக் கண்டால், பல குழந்தைக் கதைகள் சரமாரியாய்க் கிளம்பி விடுகின்றன. அதிலாவது பல வகைகள் உண்டா? ஒரு புத்திசாலிக் குழந்தை வந்தால், வரும் குழந்தையெல்லாம் அதே "டைப்"தான். போக்கிரி, அசடு, மந்தம், சாது, பயம், கோபம் இப்படிப் பல ரகக் குழந்தைகள் வந்தாலாவது வேடிக்கையாயிருக்கும். வரும் குழந்தையெல்லாம் 'துறு துறு' வென்றே யிருந்தால், பக்கத்திலிருக்கும் மைப் புட்டியை எடுத்து மேஜைமீது கவிழ்த்து விடப்போகிறதே என்று சற்றுப் பயமாய்க்கூட இருக்கிறது.

நாம் திரும்பத் திரும்ப ஞாபகப் படுத்திக் கொள்ள வேண்டிய விஷயம் ஒன்றுதான். "இமிடேஷன்" என்பது ஒரு அமுக்குப் பிசாசு. அது நம்மை யறியாமலே சில சமயம் நமது முதுகின்மீது ஏறி உட்கார்ந்து விடுகிறது. புதிய ஆசிரியர்கள் இந்தப் பிசாசு விஷயத்தில் சற்று ஜாக்கிரதையாயிருப்பது மெத்த அவசியம் என்று தோன்றுகிறது. புதிய ஆசிரியர்களைக் குற்றம் கூற எனக்கு எண்ணமில்லை. அவர்கள் சற்று அஜாக்கிரதையா யிருக்கிறார்களோ என்று தோன்றும் அச்சத்தை மாத்திரம் மறைக்க இஷ்டமில்லை. அவ்வளவுதான்.

தமிழ்மொழி சிறக்கவேண்டுமானால், கதையோ, ஹாஸ்யமோ மாத்திரமல்ல; இவற்றோடுகூட, சரித்திரம், ஸயின்ஸ், ஆர்ட் இன்னும் வாழ்வின் பற்பல துறைகளிலும், தமிழனுக்கு இல்லாவிட்டாலும் தமிழுக்குப் புதிதான, பற்பல நூதன விஷயங்களையும் அழகு பெற எழுதவேண்டு மல்லவா? நல்ல மொழிபெயர்ப்பு, அல்லது பிறமொழி எழுத்துக்களைத் தழுவிய கட்டுரை கதைகள்கூடத் தமிழில் வரவேண்டியது தான். ஆனால், எதிலிருந்து எடுக்கப்பட்டது என்பதை மாத்திரம் தயை செய்து வாசகருக்குத் தெரிவித்து விடவேண்டும். அதனால் கௌரவக் குறைவொன்று மில்லை; நமது ரஸிகத் தன்மையும், சிறந்த கருத்துக்களைக் கிரகித்துத் தமிழன் மனத்தில் பதியுமாறு சொல்லும் நமது சாமர்த்தியமும்தான் வெளிப்படும்.

புதிய ஆசிரியர் ஒரே "சோட்"டில் ஊர்ந்து கொண்டிருக்கக் கூடாது என்பதுதான் எனது ஆசையெல்லாம். ஆகையால், 'இந்தத் துணிச்சல் வார்த்தைகளின் உட்கருத்தை மாத்திரம் அவர் கிரகித்துக் கொள்ள வேண்டும் என்பது எனது பணிவான விஞ்ஞாபனம். அப்புறம், அவர் இஷ்டம்.

— தி. ஜ. ர.

தெரிந்தவர் தெரிவிக்க.

மிகவும் புராதனமான காலத்திலிருந்து, நமது நாட்டில், ஹரிஜனங்களில் மிகப் பெரும்பாலோர் தோல் பதனிடும் தொழில் செய்து வருகிறார்கள். இதனால், ஹரிஜன சேவை செய்வோர் இத் தொழிலின் அபிவிருத்தியில் கவனம் செலுத்தவேண்டியதா யிருக்கிறது. தோல் பதனிடும் குடிசைத் தொழிலுக்கு நூதன ஸயின்ஸ் முறைகளை எவ்வாறு உபயோகிக்கலாம் என்று கண்டுபிடிக்க வேண்டியது அவசியமா யிருக்கிறது.

கோடம்பாக்கத்தில் ஸ்தாபிக்க விருக்கும் தொழிற் கலாசாலையில் தோல் பதனிடும் வகுப்பும் நடத்த உத்தேசம். நூதன ஸயின்ஸ் முறைகளையும் கருவிகளையும் அத்தொழிலில் எப்படி உபயோகிக்கலாம் என்பதைத் தெரிவிப்பவர்களுக்கு நமது நன்றி உரியதாகும். மேலும், ஹரிஜனங்களுக்கு ஏற்ற தொழில்கள் என்னென்ன என்ற யோசனைகளையும் வரவேற்கிறோம்.

உபாத்தியாயர்கள் தேவை.

கோடம்பாக்கத்தில் ஆரம்பிக்கப் போகிற கைத்தொழிற் கலாசாலையில் பற்பல குடிசைத் தொழில்கள் கற்றுக் கொடுப்பதற்கு, அவற்றில் பயிற்சியுள்ள ஆசிரியர்கள் தேவை. வசிப்பதற்கு இலவச வசதி செய்து தரப்படும். தங்கள் யோக்கியதாம்சங்களையும், என்ன சம்பளம் தேவை என்பதையும் தெரிவித்து, கீழ்க்கண்ட விலாசத்துக்கு விண்ணப்பம் செய்து கொள்ளவும்.

ஹரிஜன மாணவர் தேவை.

நமது மாகாணத்தின் பல விடங்களிலிருந்தும் ஹரிஜன மாணவர்களை இக் கலாசாலையில் சேர்த்துக் கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை வரையில்தான் தற்பொழுது சேர்த்துக் கொள்ளமுடியும். சேர விண்ணப்பம் செய்து கொள்ளும் சிறுவர், நல்லொழுக்க முடையவரா யிருக்கவேண்டும்; மரக்கறி போஜனத்தை மட்டும் உண்டு வாழச் சம்மத முடையவராயு மிருக்கவேண்டும். தமிழ் நாட்டில் அங்கங்குள்ள ஹரிஜன சேவா. சங்கக் காரியதரிசிகளின் மூலமே தங்கள் விண்ணப்பங்களை அனுப்பிக் கொள்ளவேண்டும். 12 வயதுக்கு மேற்பட்டவர்களாயும், முதல்பாரம் படித்துத் தேறியவர்களாயும் உள்ள சிறுவர்களே தேவை.

காரியதரிசி,

கோடம்பாக்கம் கைத்தொழிற் கலாசாலை,

8, வி, பைக்ராப்ட்ஸ் ரோடு,

திருவல்லிக்கேணி.